விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 05 வியாழக்கிழமை (18.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



## மகியங்கனையில் கோரவிபத்து

பெண்கள், குழந்தைகள் உட்பட 10 பேர் பலி (03ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் வசிக்கும் இடங்களில் முகாம்கள் தேவை இல்லை



## வடக்கிலிருந்து இராணுவம் முழுமையாக வெளியேற வேண்டும் - இரா.சம்பந்தன்

(கொழும்பு)

மக்கள் வசிக்கும் இடங்களில் இராணுவ முகாம்கள் தேவை இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். மேலும் வடக்கிலிருந்து இராணுவம் முழுமையாக உடன் வெளியேற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## போதைப்பொருள் விற்ற 5 சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் கைது

(கிளிநொச்சி)

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 05 சந்தேக நபர்கள் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதை தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கிளிநொச்சி பொலிஸ் விசேட அதிரடிப் 24☛

## கடந்த 5 நாட்களில் நாடு பூராகவும் வாகன விபத்து 42 பேர் மரணம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த சனிக்கிழமையிலிருந்து நேற்று காலை 6.00 மணிவரையான காலப் பகுதியில் 31 வாகன 24☛

## அரசை கவிழ்ப்பதற்கு எப்போதும் தயாராக உள்ளோம் - மகிந்த

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு தாம் எப்போதும் தயாராக உள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை



கவிழ்க்கும் உரிமை தமக்கு உள்ளதாக மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்மானித்து, உறுதியாக வெற்றி பெறக்கூடியவரையே ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தப் போவதாகவும் மகிந்த ராஜ 24☛

## மின்னல் தாக்குதலால் உயிரிழந்த குடும்பங்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் நிதி உதவி



09☛

## கண்ணிவெடி வெடித்ததில் இரு பெண்கள் படுகாயம்

முகமாலை பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட இரு பெண்கள் கண்ணிவெடி வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகமாலை பகுதியில் நேற்று பகல் 2.30 மணியளவில் 24☛

## நீரில் மூழ்கி சகோதரர்கள் இருவர் உயிரிழப்பு

கொழும்பில் துயரம்

(கொழும்பு)

படகுச் சவாரியில் ஈடுபட்டிருந்த சகோதரர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என 24☛

## கடும் வெயிலால் முல்லையில் ஆடு மேய்க்க சென்றவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் ஆடு மேய்க்க சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடும் வெயில் காரணமாக மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை முதலாம் ஆம் வட்டாரத்தினை சேர்ந்த 51 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவ 24☛

## மின்னல் தாக்கியதில் இருவர் படுகாயம்

கொடிகாமம் இராமாவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி - கொடிகாமம் இராமாவில் பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற மின்னல் தாக்கத்தால் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வீதியால் சென்று கொண்டிருந்த 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# வல்வையின் இந்திரவிழா

**வல்வை முத்துமாரியம்மன் கோவில் தீர்த்தோற்சவ விழாவாகிய இந்திரவிழா வழமைபோல் இவ்வருடமும் மிகச் சிறப்பாக நாளை (19.04.2019) வெள்ளிக்கிழமை நடைபெறும்.**

- ஐந்து கிலோ மீற்றர் தூர வீதிச் சோடனைகள்.
- வீதி எங்கும் மின் வளைவுகள், அலங்காரங்கள்.
- வீதியில் பல இடங்களில் அலங்கார வளைவுகள்.
- பல மேடைகளில் சமநேரத்தில் கலை நிகழ்வுகள்.
- வான் நோக்கிப் பறக்கும் இராட்சதப் புகைக்குண்டுகள்.
- 100இற்கும் மேற்பட்ட சாதாரண புகைக்குண்டுகள்.
- இன்னும் பல கண்கவர் காட்சிகள் கலை அம்சங்கள்.
- குறிப்பாக கணபதி மின் அமைப்பாளர்களின் அதிவிசேட தொழில்நுட்பத்துடன் கூடிய கண்கவர் மின்சார விநோதங்கள்.

இன்னும் பல சேர்ந்து வல்வையை இந்திரலோகமாகக் காண அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

வல்வை மக்கள் சார்பில் வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக்குழு

(சி-8155)

## வேலை ஆள் தேவை

மிசின் பட்டடையில் வேலை செய்வதற்கு தச்சுவேலை பூரண மாகத் தெரிந்த ஒருவர் தேவை. 076 171 1231

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


## பருத்தித்துறை நகரசபை

# நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**பருத்தித்துறை நகர சபையின் நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. விண்ணப்பதாரி நகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
02. சொந்தக் கையெழுத்தில் எழுதப்படும் விண்ணப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பதாரியின் முழுப்பெயர் | : |
| முகவரி | : |
| பிறந்த திகதி | : |
| கல்வித்தகைமை | : |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | : |
| தொலைபேசி இலக்கம் | : |

03. பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் உட்பட இரு நற்சான்றிதழ்கள், வதிவிடச்சான்றிதழ் ஆகியவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
04. நடுக்கட்டல் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவர் முற்றிலும் தரகு அடிப்படையிலான (கொமிஷன்) கொடுப்பனவைப் பெறும் வகையில் நியமிக்கப்படுவார்.
05. நியமனம் பெறும் நடுக்கட்டல் உத்தியோகத்தர் ரொக்கப்பிணைப் பணமாக ரூபாய் மூவாயிரம் (3000.00) இனை அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
06. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2019.05.10 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக் கூடியதாக "செயலாளர், நகரசபை, பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
07. மேற்குறித்த பதவிக்கான நியமனம் பெறுவோர் நிரந்தர நியமனம் பெறுவதற்கோ அல்லது கோருவதற்கோ உரித்துடையவர்கள் அல்லர்.
08. நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானம் தவிசாளரால் / செயலாளரால் மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
நகரசபை, பருத்தித்துறை.

(சி-6153)

# மரண அறிவித்தல்



தோற்றம்: 1955.04.14
மறைவு : 2019.04.16

## நடராசா இராசலிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வயாவிளான் கோணாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் லங்கா சீமெந் லிமிற்றெட் காங்கேசன்துறை ஊழியரும், தற்போதைய மெக்கானிக்கல் பப்றிக் சேசன் வேக்சொப் நீர்கொழும்பு ஊழியருமான நடராசா இராசலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (16.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கதிரவேலு - மனோன்மணி தம்பதியினரின் மூத்த மருமகனும், கிருஷ்ணகுமாரி அவர்களின் பாசமிகு கணவரும், உஷாநாத் (பிரான்ஸ்), நிமல்நாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிருஜா அவர்களின் பாசமிகு மாமனாரும், சிவபாக்கியம், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் ஸ்ரீலிங்கம், மகாலிங்கம், இராஜமலர், நேசமலர், சந்திரலிங்கம், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் சசீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், கிருஷ்ணவேணி (பிரான்ஸ்), கிருஷ்ணமேனன் (பிரான்ஸ்), கமலவேணி (கனடா), மதியழகன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் செல்வரட்ணம், சந்திரமலர், காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் மனோகரி, காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் ஸ்ரீதேவி, வினித்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2019) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குட்டியபுலம் பிள்ளையான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை, வயாவிளான். (8501)

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாலை வேளை பயங்கர விபத்து

# 3 குழந்தைகள், 3 பெண்கள் உட்பட

# பத்துப் பேர் பரிதாபமாகப் பலி!



(மகியங்கனை)

நேற்று அதிகாலை இடம்பெற்ற பயங்கர விபத்தொன்றில் 3 குழந்தைகள் மற்றும் 3 பெண்கள் உட்பட பத்துப் பேர் உயிரிழந்துள்ள நிலையில், 2 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மகியங்கனை - பதுளை பிரதான வீதியின் மகியங்கனை தேசிய பாடசாலையின் முன்னால் குறித்த விபத்து அதிகாலை 1.35 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனியார் பேருந்து ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வான் வேகக்கட்டுப்பாட்டை யிழந்தமையே விபத்துக்கான காரணம் என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதுடன் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இந்த விபத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களில் இரட்டைக் குழந்தைகள் உட்பட 10பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஜுட் ஹென்றிக் (வயது-48), அவரது மனைவி கிறஸ்ன்டா ஹென்றி (வயது-42), அவர்களது மகன் ஜு.ஹெய்ட் (வயது-19), மகள் ஷெரேபி (வயது-10) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை கருவப்பங்கேணி முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த லிஸ்டர் (34 வயது), அவரது மனைவி நிசாலி (27வயது), அவர்களது இரட்டைக்குழந்தைகளான மூன்று வயதுடைய பைஹா, ஹனாலி ஆகியோரும் நிசாலியின் தாய் தந்தையரான ரெலிங்டன்ஸொப்ஸ் (56வயது), செல்பியா (53வயது) ஆகியோரும் இந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இதில் நிசாலியின் குடும்பத்தினைச் சேர்ந்த அனைவரும் உயிரிழந்துள்ள நிலையில் ஜுட் ஹென்றியின் ஒரு மகள் ஆபத்தான நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் உள்ள உறவினர்களின் வீட்டுக்குச் சென்று, அம்பாறையில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது 12பேர் பயணித்ததாகவும் அவர்களில் 10பேர் உயிரிழந்துள்ளதோடு, இருவர் ஆபத்தான நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலைக்கு தி.மு.க.பதில் சொல்ல வேண்டும்

### அ.தி.மு.க.அமைச்சர் பிரசாரம்



(சாத்தூர்)

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு தி.மு.க., பதில் சொல்லியே ஆக வேண்டும், என தமிழக அமைச்சர் ராஜேந்திரபாலாஜி தெரிவித்துள்ளார்.

சாத்தூர் இடைத்தேர்தலில் அ.தி.மு.க., சார்பில் போட்டியிடும் ராஜவர்மன், விருதுநகர் லோக்சபா தொகுதி தே.மு.தி.க., வேட்பாளர் அழகர்சாமி ஆகியோரை ஆதரித்து சாத்தூர் ஒன்றிய பகுதிகளில் பிரசாரம் செய்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அ.தி.மு.க வலுவான கூட்டணியை அமைத்துள்ளது. 40 பாராளுமன்றத் தொகுதி , 18 சட்டசபை தொகுதியில் அ.தி.மு.க., கூட்டணி வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு தி.மு.க., பதில் சொல்லியே ஆக வேண்டும்.

நமது இரத்த உறவுகளை இலங்கை இராணுவம் கொத்துக் கொத்தாக கொன்று குவித்த போது வேடிக்கை பார்த்த தி.மு.க.,- காங்கிரஸ் கூட்டணிக்கு இந்தத் தேர்தலில் த்க்க பாடம் புகட்ட வேண்டும்.

அ.தி.மு.க., பா.ஜ.க. தேர்தல் அறிக்கை தமிழக அரசியலில் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மையின மக்களின் உண்மை நண்பனாக மோடி" திகழ்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அகதிகளாக தமிழ் நாட்டுக்கு சென்ற 25 குடும்பங்கள் தாயகம் வருகை

### அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிக அலுவலக வசதிப்படுத்தலுடன் யுத்த காலத்தில் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக சென்றவர்களில் 25 குடும்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

சுயவிருப்பின் பேரில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் எயார்லங்கா UL 138, UL 132 மற்றும் UL 122 மூலம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இதில் 23 ஆண்களும் 25 பெண்களும் உள்ளடங்குவர். இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கு செல்லவுள்ளனர் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்



வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலவச பயணச்சீட்டு, ஒன்றிணைத்தல் மானிய கொடுப்பனவாக வயது வந்தவர்களுக்கு 10,000 ரூபாவும் வயது குறைந்தவர்களுக்கு 5,000 ரூபாவும், போக்குவரத்து கொடுப்பனவாக 2,500 ரூபாவும் உணவு அல்லாத மானிய கொடுப்பனவாக தனிநபருக்கு 5,000 ரூபாவும், குடும்பத் திற்கு 10,000 ரூபாவும், அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் உயர்ஸ்தானிக அலுவலகத் தால் வழங்கப்படுகின்றது.

மேலும் மீள்குடியேற்ற அமைச்சால் விமான நிலையத்தில் 5,000 ரூபாவும் தற்காலிக கொட்டகைகளுக்காக 25,000 ரூபாவும், உபகரணங்களுக்கு 3,000 ரூபாவும் காணி துப்பரவு செய்வதற்கு 5,000 ரூபாவும் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் வாழ்வாதாரத் திட்டங்களிலும் வீட்டுத்திட்டங்களிலும் தெரிவின் போது சிறப்பு புள்ளிகள் வழங்கப்படுகின் றன என சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி சட்டத்தரணிகளாக மேலும் 21 பேர் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சட்டத்தரணிகளாக 21 சட்டத்தரணிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் 33 (2) உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியிடம் பகிரப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, சம்பத் மென்டிஸ், நவின் மாரப்பன, ஸானகத சில்வா, பியசேன தீரத்ன, எம்.ஜயசிங்க, நளிந்த ஜயதிஸ்ஸ, வீ.கே. சொக்ஸி, நளீன் திசாநாயக்க, மயூர குணவன்ஸ, வசந்த கஜநாயக்க, அஜந்த ரொட்ரிகோ, பாமர்காசிம், ஜகத் விக்ரமநாயக்க, சுமித் பொன்சேகா, வீசலி அமித்ரிகல, சாலிய மொஹொட்டி, வின்சன்ட் பெரேரா, சனத் வீர்ரத்ன, ஏ.எச்.எம். இல்லியாஸ், சுவர்ணா பெரேரா ஆகிய சட்டத்தரணிகளே ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமனம் பெற்றுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘பதறிய’ துடுப்பாட்டம் ‘சிதறிய’ சென்னை

## ஹைதராபாத்துடன் வீழ்ந்து ஏமாற்றியது


25 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசிய டேவிட் வோர்னர்

ஹைதராபாத் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்ற சென்னை அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்தியாவில் 12ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. ஹைதராபாத்தில் நடந்த லீக் போட்டியில் சென்னை, ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் பொறுப்புத் தலைவர் ரெய்னா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

சென்னை அணியில் சான்ட்னர் நீக்கப்பட்டார். இவர்களுக்குப் பதில் சாம் பில்லிங்ஸ், கரண் சர்மா களமிறங்கினர். ஹைதராபாத் அணியில் ரிக்கி புய், அபிஷேக் சர்மாவுக்குப் பதில் ஷாபாஸ் நதீம், யூசுப் பதான் சேர்க்கப்பட்டனர்.

**நல்ல ஆரம்பம்**

சென்னை அணிக்கு வோட்சன், டுபிளசி ஜோடி இம்முறை சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. முதல் இரண்டு ஓவர்களில் நிதானம் காட்டிய இவர்கள் போகப் போக வேகம் எடுத்தனர். புவனேஷ்வர் பந்தில் பவுண்டரி அடித்த வோட்சன், சந்தீப் சர்மா பந்திலும் விளாசினார்.

கலீல் அகமட் வீசிய 6வது ஓவரில் டுபிளசி, தலா ஒரு சிக்சர், பவுண்டரிகள் என அடித்தார். அடுத்து வந்த நதீம் பந்தில் டுபிளசி சிக்சர் அடிக்க, வோட்சன் பவுண்டரியாக மாற்றினார்.

இதன் பின் திடீரென சரிவு ஏற்பட்டது. நதீம் சுழலில் வோட்சன் (31) போல்டானார். மறுபக்கம் விஜய் சங்கர் 'வேகத்தில்' சரிந்த டு பிளசி (45) அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்து திரும்பினார்.

**ரஷித் ‘இரண்டு’**

போட்டியின் 14வது ஓவரை வீசிய ரஷித் கான் சென்னைக்கு இரட்டை 'அடி' கொடுத்தார். முதல் பந்தில் தடுமாறிய ரெய்னாவை (13) வெளியேற்றினார். நான்காவது பந்தில் கேதர் ஜாதவையும் (1) கிளப்பி விட்டார். சாம் பில்லிங்ஸ் 'டக்' அவுட்டானார். முதல் 9 ஓவர்களில் 70 ஓட்டங்கள் எடுத்த சென்னை, அடுத்த 5 ஓவர்களில் 29 ஓட்டங்கள் மட்டும் எடுக்க, 14.2வது ஓவரில்தான் 100 ஓட்டங்களை எட்டியது.

தொடர்ந்து ஹைதராபாத் பந்துவீச்சாளர்கள் அசத்த, அம்பதி ராயுடு, ஜடேஜா ஓட்டம் சேர்க்க முடியாமல் திணறினர். கடைசி ஐந்து ஓவர்களில் இரண்டு பவுண்டரிகள் மட்டும் அடிக்கப்பட்டன.

20 ஓவர்களில் சென்னை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. ஜடேஜா (10), அம்பதி ராயுடு (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் ஹைதராபாத் சார்பில் ரஷிட் கான் அதிகபட்சம் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**மின்னல் வேகம்**

எளிய இலக்கைத் துரத்திய ஹைதராபாத் அணிக்கு வோர்னர், பேர்ஸ்டோவ் ஜோடி மின்னல் வேக ஆரம்பம் கொடுத்தது. சகார், ஷர்துல் பந்துகள் பவுண்டரிக்கு பறந்தன. இம்ரான் தாகிர் வீசிய முதல் ஓவரில் வோர்னர், 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்தார். 24 பந்துகளில் அரைச்சதம் அடித்த வோர் னர் (50), சகாரிடம் வீழ்ந்தார். வில்லியம்சன் (3) இம்ரான் தாகிரிடம் சிக்கினார்.

மனம் தளராத பேர்ஸ்டோவ், ஜடேஜா பந்தில் பவுண்டரி, கரண் சர்மா ஓவரில் 2 சிக்சர்கள் என அடிக்க, வெற்றி இலக்கை வேகமாக நெருங்கியது ஹைதராபாத். விஜய் சங்கர் 7, தீக்ஹூடா 13 ஓட்டங்கள் எடுத்தனர்.

கடைசியில் பேர்ஸ்டோவ் ஒரு சிக்சர் அடிக்க, ஹைதராபாத் அணி 16.5 ஓவர்களில், 4 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**60 பந்து, 52 ஓட்.,**

சென்னை அணியின் துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. முதல் 10 ஓவர்களில் 80/1 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கடைசி 10 ஓவர்களில் அதாவது 60 பந்துகளில் 52 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

**தோனி காயம்**

சென்னை அணியின் தலைவர் தோனி காயம் காரணமாக, ஐ.பி.எல்., அரங்கில் நான்காவது முறையாக களமிறங்கவில்லை. இதற்கு முன் 2010ல் (டில்லி, பஞ்சாப், பெங்களூர்) மூன்று போட்டிகளில் தோனி பங்கேற்வில்லை. இதில் சென்னை 1ல் வென்று, 2ல் தோற்றது.




## ‘புரட்சிப் புயல்’ கபில்



**தெரியுமா**

**சேட்டன் ‘ஹட்ரிக்’**

உலக கிண்ண வரலாற்றில் 'ஹட்ரிக்' சாதனை படைத்த முதல் வீரர் இந்தியாவின் சேட்டன் சர்மா. கடந்த 1987ல் நாக்பூரில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான லீக் போட்டியில் "வேகத்தில்' மிரட்டிய இவர், தொடர்ந்து மூன்று பந்துகளில் கென் ரூதர்போர்ட், இயன் ஸ்மித், ஈவன் சாட்பீல்டை போல்டாக்கினார். இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

மூன்றாவது உலக கிண்ணத் தொடர் 1983ல் இங்கிலாந்தில் நடந்தது. இம்முறை கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. 'கபில் டெவில்ஸ்' என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு எழுச்சி கண்டது.

இத்தொடரிலும் 8 அணிகள் பங்கேற்றன. கனடாவுக்கு பதில் சிம்பாப்வே அறிமுக அணியாக கலந்து கொண்டது. அதே 60 ஓவர்கள், சிவப்பு பந்து போன்றவை பயன்படுத்தப்பட்டன. அணிகள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டன. இம்முறை லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் இரண்டு முறை மோத வேண்டும் என்பது மட்டும் புதிய விடயம்.

**கபில் 175 ஓட்டங்கள்**

லீக் சுற்றில் அதிர்ச்சி முடிவுகளுக்கு பஞ்சமில்லை. முதல் லீக் போட்டியில் 'கத்துக்குட்டி' சிம்பாப்வேயிடம், அவுஸ்திரேலியா வீழ்ந்தது. பின் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 17 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. இந்த நேரத்தில் களமிறங்கிய அணித் தலைவர் கபில் தேவ் தனிநபராக போராடி 175 ஓட்டங்கள் எடுத்து, அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார்.

**இந்தியா சம்பியன்**

பரபரப்பான இறுதிப் போட்டியில் (25.6.1983) இந்தியா, மே.தீவுகள் அணிகள் மோதின. இதில், இரண்டு முறை சம்பியனான மே தீவுகள் தான் வெற்றி பெறும் என கணிக்கப்பட்டது. இதற்கேற்ப, முதலில் துடுப்பாட்டம் செய்த இந்திய அணி, மே.தீவுகள் பந்துவீச்சில் நிலைகுலைந்தது. றொபர்ட்ஸ், மார்ஷல், ஜோயல் கார்னர், மைக்கல் ஹோல்டிங் உள்ளிட்ட 'வேகங்கள்' போட்டுத் தாக்க, இந்திய அணி 54.4 ஓவர்களில் 183 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஸ்ரீகாந்த் அதிகபட்சமாக 38 ஓட்டங்கள் எடுத்தார்.

பின் சுலப இலக்கை விரட்டிய மே.தீவுகள் அணிக்கு இந்திய வீரர்கள் "ஷாக்" கொடுத்தனர். கிரீனிட்ஜ் (1), ஹெய்ன்ஸ் (13) விரைவில் வெளியேறினர். அடுத்து மதன் லால் வீசிய பந்தை 'ஆபத்தான' ரிச்சர்ட்ஸ் (33) தூக்கி அடிக்க, அதனை சுமார் 60 அடி தூரம் ஓடிச் சென்று பிடித்த கபில் தேவ், அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தார். மே.தீவுகள் அணி 52 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்ற இந்திய அணி முதல் முறையாக உலக கிண்ணத்தைக் கைப்பற்றி, வரலாறு படைத்தது. மூன்று விக்கெட் வீழ்த்திய மொகிந்தர் அமர்நாத் "ஆட்டநாயகன்" விருதை பெற்றார். இம்முறையும் தொடர் நாயகன் விருது வழங்கப்படவில்லை.




## இலங்கையின் ‘உலக’ அணிக்கு கருணாரத்னே தலைவர்

உலக கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணிக்கு தலைமை தாங்கவுள்ளார் கருணாரத்ன.

இலங்கை ஒருநாள், 'ரி20' அணியின் தலைவராக, வேகப்பந்து வீச்சாளர் மலிங்க இருந்தார். தற்போது உலக கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணிக்கு புதிய தலைவராக திமுத் கருணாரத்ன தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஆரம்ப துடுப்பாட்ட வீரரான இவர் 17 ஒருநாள் போட்டிகளில் (190 ஓட்.,) மட்டுமே பங்கேற்றார்.

கடந்த ஆண்டின் ஐ.சி.சி., டெஸ்ட் கனவு அணியில் இடம் பெற்றார். இந்த ஆண்டு ஆரம்பத்தில் கருணாரத்ன தலைமையிலான டெஸ்ட் அணி, தென்னாபிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரை முழுமையாக வென்றது.


கருணாரத்தன்

சமீபத்தில் இலங்கையில் குடிபோதையில் கார் ஓட்டிய வழக்கில், இவருக்கு அபராதம் விதிக்கப்பட்டு, லைசன்ஸ் பறிமுதல் செய்யப்பட்டது. தற்போது ஒருநாள் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களில் மத்யூஸ், சண்டிமல், மலிங்க வரிசையில் இலங்கை அணிக்கு நான்காவது தலைவராக குணரத்ன தேர்வாகினர். உலக கிண்ணத்துக்கான அணி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தல்

## யாராலும் தடுக்க முடியாது-ஐ.தே.க

(கொழும்பு)

**இந்த ஆண்டின் இறுதியில் நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார். அத்துடன் இந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தப்பிக்கவோ அல்லது தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதைத் தடுத்து நிறுத்தவோ எவராலும் முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.**

"உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் புதிய முறைமைக்கு அமைவாக நடத்தப்பட்டமையால் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் அதிகரிப்புடன் செலவுகளும் பிரச்சினைகளும் அதிகரித்திருந்தன. இந்த நிலைக்கு எதிர்வரும் மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது இடமளிக்க முடியாது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டியுள்ளதை மறந்துவிடக் கூடாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது.

அரசியல் நெருக்கடி நிலைமையின் பின்னர் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருந்தன. இருப்பினும் தற்போது ஜனாதிபதித் தேர்தலையும் உடனடியாக நடத்த வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரோ அல்லது தேர்தலின் பின்னரோ மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் அது நிச்சயமாக புதிய முறையில் நடத்தப்பட வேண்டும்" என



அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# திருப்பதியில் மைத்திரி குடும்பத்துடன் வழிபாடு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருப்பதி ஏழுமலையானை நேற்றுக்காலை தரிசனம் செய்தார். திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்வதற்காக இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் சிறப்பு விமானம் மூலம் ரேணிகுண்டா விமான நிலையம் சென்றடைந்தார்.

அங்கிருந்து கார் மூலம் திருப்பதி தேவஸ்தானம் சென்ற ஜனாதிபதி மைத்திரியை தலைமை செயல் அலுவலர் அனில் குமார் சின்கால், இணைச் செயல் அலுவலர் சீனிவாச ராஜு ஆகியோர் வரவேற்றனர். இதையடுத்து நேற்று முன்தினம் பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்த ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினர் நேற்று அதிகாலை சுப்ரபாத சேவையில் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாவட்டச் செயலக வளாகத்தில் நீண்ட காலமாக

# பொதுமக்களை ஏமாற்றி வந்த நபர் உத்தியோகத்தரிடம் வசமாக மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலகத்தில் பல்வேறு ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு வருகைதரும் பொதுமக்களுடன் உரையாடி அவர்களுடைய ஆவணங்களை விரைவாக பெற்றுத் தருவதாகக் கூறி அவர்களிடமிருந்து பெருமளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு தான் ஆவணத்தை பெற்று வருவதாகவும் அதுவரை காத்திருக்குமாறும் கூறி மாயமாக மறைந்து விடுவார். நீண்ட நேரமாக பொதுமக்கள் காத்திருந்து பின்னர் தாம் ஏமாந்தது தொடர்பாக செயலக அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக முறையிட்டு வந்தனர். செயலக அதிகாரிகள் சீ.சீ.ரி.வி கமரா மூலம் குறித்த ஆசாமியை அடையாளம் கண்டு அவரை தேடி வந்தனர்.

இந்நிலையில் 27.03.2019 குறித்த நபர் சிற்றுண்டிச் சாலையில் பொதுமகன் ஒருவருடன் உரையாடுவதை அவதானித்த அதிகாரிகள் அவரை அழைத்து தம்மிடமிருந்த சீ.சீ.ரிவி பதிவுகளை காண்பித்து விளக்கம் கோரினர்.

அவரும் தனது குற்றத்தை ஒத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து குறித்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சு. தெய்வேந்திரம் தெரிவித்தார். (இ)

## இராசி பலன்

18.04.2019

சித்திரை 05, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 7.08 மணிவரை

அத்தம் முன்னிரவு 9.10 மணிவரை

சுபநேரம் 7.33 - 9.03 மணிவரை

இராகுகாலம் 1.33 - 3.03 மணிவரை

கிரகநிலை

| சுக், புத | சூரி, | செவ் | ராகு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| சனி, கேது, குரு | | | சந் |

சந்திராஷ்டமம்
பூரட்டாதி, உத்திரட்டாதி

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, ரோக பயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** கடன்களை வசூலாக்க எடுத்த முயற்சி கைகூடும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உறவினர் வருகையுண்டு, நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிட்டும்.

**இடபம்:** கல்யாணக் கனவுகள் நனவாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்துடன் செயற்படுவது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பணப்பற்றாக்குறையுண்டு, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**கடகம்:** நிதி நிலை உயரும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று முடிவுக்கு வரலாம், பாசத்தோடு பழகியவர்கள் எண்ணிக்கை கூடும்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வாழ்க்கைத் தரும் உயர வழிவகை செய்வீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும்.

**சிம்மம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள இடம்பெறலாம்.

வளவன்

**தனுசு:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்:** வியக்கும் தகவல்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்:** காரிய அலைச்சல்கள் கூடும் நாள், கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், சயனக் சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.தீவகம் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேர்த்திருவிழா கடந்த 14 ஆம் திகதி புதுவருடப் பிறப்பன்று இடம்பெற்றது.

## முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் சட்டத்தரணி ப.ஜனார்த்தன் கலந்து கொண்டு "மக்கள் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படைச் சட்டங்கள்" எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (இ-5)

"கொவிப் பொல"

# இணைய விவசாயச் சந்தையை உருவாக்கும் பணிகள் முன்னெடுப்பு

## வடமாகாணப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இடைத்தரகர்கள் இல்லாத வியாபாரிகளையும் விவசாயிகளையும் ஒன்றிணைக்கும் செயற்றிட்டமாக "கொவிப் பொல" விவசாயச் சந்தையை ஆரம்பிக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக வடமாகாண விவசாயப் பணிபாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

வடமாகாணத்திலுள்ள சகல விவசாயிகளையும் வியாபாரிகளையும் ஒரு குடையின் கீழ் இணைத்து இவ் வர்த்தக நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

"கொவிப் பொல" (விவசாயச் சந்தை) இணையப் பெயருடனான சொல்லில் உருவாக்கப்பட்டுள்ள இணைய முகவரியுடன் பொருட்களை விற்பனை செய்யும் விவசாயிகளும் அதனை வாங்கும் வியாபாரிகளும் தாமாகவே தொடர்புகளைஏற்படுத்திக்கொள்ளமுடியும்.

இவ் இணைய முகவரியில் சந்தைப்படுத்தவுள்ள பொருளின் பெயர், தரம், அண்ணளவான விலை ஆகியவற்றைப் பதிவு செய்வதன் மூலம் தேவையுடையவர்கள் தாமாகவே தொடர்புகளை மேற்கொள்ள முடியும். இத்திட்டத்தின் மூலம் இடைத் தரகர்கள் இல்லாத நியாயமான விலைக்கேற்ப தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-10)

## பல்கலைக்கழகப் பண்பாட்டில் பகிடிவதை; கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகப் பண்பாட்டில் பகிடிவதை என்ற தலைப்பில் பகிடிவதை தொடர்பானதொரு திறந்த கலந்துரையாடல் நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (பௌர்ணமி தினம்) பிற்பகல் 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியிலுள்ள முகவரியில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இக் கலந்துரையாடலில் அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## 108 சங்காபிஷேகம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பரிவாரத் திருக்கோவில்களில் ஒன்றான முத்துமாரியம்மன் கோவில் (பண்ணை - மீனாட்சியம்மன் கோவில்) 15 நாட்கள் அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேகமும் இடம்பெறும். (இ-5)

## பவள விழாவும் மலர் வெளியீடும்

மூத்த எழுத்தாளரும் "தாயக ஒலி" சஞ்சிகையின் ஆசிரியருமான தம்பு சிவசுப்பிரமணியத்தின் பவள விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் பேராசிரியர் வ.மகேஸ்வரன் மற்றும் ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தம்பதியர் கலந்து கொள்வர். பிரம்மஸ்ரீ உ.சுபராஜிதக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் கலாநிதி ஆறு. திருமுருகன், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் க.தேவராஜா, கல்லூரி அதிபர் இ.துரை சிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். (இ-5)




## வில்லூன்றியில் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக்கோவில் சித்திரா பூரணைப் பெருவிழா நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதில் காலை 8 மணியளவில் சித்திரா பூரணைத் தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுட்டானங்களும் இடம்பெறும். அதன் பின்னர் பொதுமக்கள் தங்கள் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ள முடியுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5)



கோண்டாவில் தென்கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒருவருட பூர்த்தி ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. திருமதி.லலிதா சிவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

## பொலிஸ் நிலையத்தில் புத்தாண்டு விழா





(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையச் சித்திரைப் புத்தாண்டு விழா கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடிப் பொலிஸ் நிலைய வளாகத்தில் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் விருந்தினராகக் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என்.யு.ஜே. சித்தானந்த கலந்து கொண்டார். நிகழ்வில் புதுவருடப் பொங்கல் இடம்பெற்றது. (இ-5-60)

## வர்த்தக நிலைய விடுமுறை

(கரணவாய்)

சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நெல்லியடி வாணிபர் கழக எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் யாவற்றிற்கும் நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக நெல்லியடி வாணிபர் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5-60)

## இரதோற்சவம் நாளை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த இரதோற்சவம் நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வசந்த மண்டபப்பூசையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணியளவில் இரதோற்சவம் இடம்பெறும். (இ-5)

## "கல்விக்கு கைகொடுப்போம்"



(யாழ்ப்பாணம்)

கல்விக்கு கைகொடுப்போம் வருடாந்த நிகழ்வும் உதவி வழங்கலும் அண்மையில் பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

புலோலி அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் யோ.இருதயராசா, வடமராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.பத்மநாதன், இங்கிலாந்து புலோலி அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் த.சிவகுருநாதன் மற்றும் வடமாகாண ஆளுநரின் பொது மக்கள் தொடர்பாடல் அதிகாரி க.செவ்வேள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக வளாகத்தில் வடகிழக்கு பக்கமாக மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதன் தர்மலிங்கம் அவர்களின் உருவச்சிலை அமைப்பதற்கு அமரர் தர்மலிங்கம் ஞாபகார்த்த குழுவினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இச்சிலை அமைப்பதற்கு ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 03.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
(C-6148)
தவிசாளர் .

# பொது அறிவித்தல்

1972 ஆம் இலக்க 17.06.2016 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு சொந்தமான சிங்கத்தின் கலட்டி வீதியை வைத்திய கலாநிதி ரகுபதி வீதி என பெயர்மாற்றம் செய்வதற்கு பொதுமக்களால் எமது சபைக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு:-

வீதியின் இலக்கம் - **NJVSE 046**
கி.உ.பிரிவு - உடுவில் தென்கிழக்கு, இணுவில் மேற்கு, இணுவில் தென்மேற்கு
கி.உ.பிரிவு இலக்கம் - **J/183, J/191, J/188**
வீதியின் ஆரம்பம் - மானிப்பாய் வீதி
வீதியின் முடிவு - இணுவில் மானிப்பாய் வீதி
வீதியின் நீளம் - 1050 மீற்றர்

எனவே இவ்வீதி பெயர்மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் இன்றிலிருந்து ஒரு மாதகாலத்திற்குள் எழுத்து மூலம் **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
(C-6149)
தவிசாளர்.



**(யாழ்ப்பாணம்-தீவுப்பகுதி-அல்லைப்பிட்டி**
**இனிச்சபுளியடி ஸ்ரீமுருகன் ஆலய இரதோற்சவம்**
**18.04.2019 வியாழக்கிழமை இன்று காலை இடம்பெறுகிறது)**

## முருகன் வண்ணத் தேரேறி வருகிறான்!

வண்ணத் தேரேறி வருகிறான்!–அல்லைப்பிட்டி
மண்ணில் இனிச்ச புளியடி முருகன் (வண்ண)

எண்ணும் அடியார்கள் இதயங் கனிந்திட
இன்னல் களைந்தவர் இன்பம் பெருக்கிட (வண்ண)

நாதஸ்வர மேளங்கள் நாற்றிசையும் முழங்க
நற்றமிழ்ப் பாசுரங்கள் நமையெல்லாம் உருக்க
வேத மந்திரங்கள் வேதியர் நாவிசைக்க
வெற்றி வடிவேலன் சுற்றும் பகையொழிக்க (வண்ண)

ஆலமர நீழலில் அமர்ந்தவன்–நூறு
ஆண்டுகளின் முன்னர் ஆலயங் கண்டவன்
சாலஇறை பணிசெய்த செல்லத்துரை உடையார்
சந்ததிக்குத் தந்துவிட்ட சன்மானமாய்த் திகழ்பவன் (வண்ண)

வீதியிலே முருகரதம் விரைகின்றது! – பக்தர்
விடிவுகாண விம்முமொலி காதில் வந்து விழுகின்றது!
ஆதி சிவன் மைந்தனுடன் அழகு இரு வனிதையர்
அருகிருக்கும் காட்சி கண்டு அடியார் மனம் குளிர்கின்றது (வண்ண)

(8495)

கவி ஆக்கம்:- கலாநிதி, பண்டிதர், செல்லையா திருநாவுக்கரசு
(அல்லைப்பிட்டி)
விளம்பர அனுசரணை:- அல்லையூர் இனையம்
(பிரான்ஸ்)



# தேயிலை ஏற்றுமதியின் மூலம் 160 கோடி ரூபாய் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

தேயிலை ஏற்றுமதியின் மூலம் இந்த ஆண்டில் 160 கோடி ரூபாய் வருமானத்தை எதிர்பார்ப்பதாக இலங்கை தேயிலை சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்கு விக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அச்சபையின் தலைவர் எல்.விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தேயிலை உற்பத்தித் துறையில் கூடுதலான வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (இ-7)


பழைமை வாய்ந்த
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(8497)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 49 ¾செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Reading External Degree, தனியார் ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில், உள்நாடு
தொ.இ: B/9597

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, NIIT, London
எதிர்பார்ப்பு: சங்கீத,நடனடிப்ளோமா, பட்டதாரி,ஆசிரியை,உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9598

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா:சூரிசெவ் 12 இல் உயரம்: 6'
தகைமை/தொழில்:B.Sc, M.Sc, Engineer, Singapore
எதிர்பார்ப்பு: பட்டதாரி,உள்நாடு
தொ.இ: B/9600

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: 13 ½
தகைமை/தொழில்: London
எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி,உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/1910

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 43 ½ சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரசதொழில் /வெளிநாடு
தொ.இ: G/4063

பிறப்பு: 1981கிறிஸ்தவம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் பதிவுத் திருமணத்துடன் விவாகரத்தானவர்
தொ.இ: G/4064

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 49 ¾
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தும் விரும்பத்தக்கது
தொ.இ: G/4073

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 19 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:B.Sc, M.Sc
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/4089

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவித சதிமுயற்சிகள் மூலமும் அரசைக்கவிழ்க்க விரும்பவில்லை

## கோத்தா மீது பயம் – மகிந்த வெளிப்படுத்தல்

(பெல்லன்விலை)

**கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கானது அவர் மீது இருக்கும் பயத்தை வெளிக்காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எந்தவித சதி முயற்சிகளும் இல்லையென்றும், எல்லா சந்தர்ப்பங்களுக்கும் தயாராகவிருப்பதாக மகிந்த தெரிவித்துள்ளார்.**



நேற்று பெல்லன்வில விகாரையில் இடம்பெற்ற தலைக்கு எண்ணெய் வைக்கும் புதுவருட பாரம்பரிய நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெறுவதாகத் தெரிவித்துள்ள மகிந்த, சகல கட்சிகளும் ஒன்றிணைவதற்குத் தேவையான காலம்வரும்போது, ஜனாதிபதிவேட்பாளர் தொடர்பாக முடிவெடுக்கப் படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இன்று குடிநீர், மின் துண்டிப்பு காரணமாக, மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு ஒருவர், இருவர் இல்லாமல் முழு அமைச்சரவையும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.நா.பொதுச்செயலரின் பிரதிநிதியாக சுமந்திரன்

தென்னாசிய வட்டகையில் ஐ.நா. பொதுச் செயலாளரின் பிரதிநிதியாகப் பணியாற்ற அழைக்கப்படக்கூடிய பிரமுகர்கள் அணியில் ஒருவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவு செயற்பட்டுள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலாளரின் விசேட பிரதிநிதிகளாகப் பணியாற்றக் கூடிய முக்கிய பிரமுகர்களுக்கான இரண்டு நாள் கருத்தாடல் அமர்வு நேபாளத்தில் நடைபெறுகின்றது. அந்த அமர்வில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் பங்குபற்றுகின்றார்.

தென்னாசிய வட்டகையில் திடீரெனப் பிணக்குகள் உருவாகின்றபோது, ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதிகளாக அவற்றைக் கையாளும் தகுதியுடையோரை ஐ.நா. செயலாளர் நாயகம் தேர்ந்தெடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், மாலைதீவு, இலங்கை, பூட்டான் உட்பட பத்து நாடுகளில் இருந்து சுமார் 25 பிரமுகர்களை ஐ.நா. செயலாளர் நாயகம் தமது பிரதிநிதி அந்தஸ்துடன் தெரிவு செய்துள்ளார்.

அவர்களுக்கான கருத்தாடல் அமர்வே தற்போது நேபாளத்தில் நடக்கின்றது.

இலங்கையிலிருந்து எம்.ஏ. சுமந்திரனும், முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் பிரசாத் காரியவசமும் ஐ.நா. செயலாளர் நாயகத்தால் தேவைப்படும் அவசர வேளையில் தமது பிரதிநிதியாகச் செயற்படுவதற்குரிய பிரமுகர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளரான ராதிகா குமாரசுவாமியும் இந்தக் கருத்தாடல் அமர்வில் பங்குபற்றுகின்றார்.

ஐ.நா. செயலாளர் நாயகத்தால் இப்பொறுப்புக்குப் பெயர் குறிப்பிட்டுத் தெரிவு செய்யப்பட்டோரில் பெரும்பாலானோர் இராஜதந்திரிகளும், சர்வதேச சமூக செயற்பாட்டாளர்களும் ஆவர். சுமந்திரன் எம்.பியும், நேபாளதேச எம்.பி. ஒருவருமே இப்பொறுப்புக்கு அழைக்கப்பட்ட அரசியல்வாதிகள்என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனைத்து அரசியல் கட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## சீனத் தூதுவர் புதுவருட வாழ்த்து



இலங்கையின் அனைத்து மட்ட அரச தரப்பு மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் ஒன்றிணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதுடன், பல்வேறு துறைகளிலும் எமது தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராகவுள்ளதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்களப் புதுவருடத்தையொட்டி இலங்கைக்கான சீனத்தூதுவர் செங் சூவான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புதுவருடம் பிறந்துள்ள நிலையில், இலங்கையின் அனைத்து மட்ட அரச தரப்பு மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் ஒன்றிணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதுடன், பல்வேறு துறைகளிலும் எமது தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

அத்தோடு இலங்கை மக்களுக்கு சீன அரசாங்கம் மற்றும் மக்களின் சார்பாக புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அமைதியானதும் சமாதானமான புதுவருடமாக இது அமைய வேண்டும் என்று வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் தேசிய அபிவிருத்தி மற்றும் மக்களுக்கான சேவைகளுக்கு எமது இயலுமைக்கு ஏற்றவாறு அனுசரணைகளையும், உதவிகளையும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம்.

இப்புதுவருடத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் மேலும் வலுவான ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப முடியும் என்று நம்புகின்றோம் எனவும் சீனத்தூதுவர் அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மஹா யக்ஞம்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தர காண்ட பாராயண மஹா யக்ஞம் நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (5)

# புத்தகதினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தால் சிறுவர் வட்ட மாணவர்கள், பெற்றோர்களுக்கான போட்டிகள் நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரையும் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் காலை 9.30 மணிக்கும் கொக்குவில் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளன. (5)

# சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நினைவேந்தல் நிகழ்வு கொழும்பில்

(கொழும்பு)

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு நாளை மறுதினம் 20 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சட்டத்தரணி ந.காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இதில் "சிவத்தமிழ் வித்தகரின் பன்முகப் பணிகள்" எனும் தலைப்பில் சுங்கத்திணைக்கள அத்தியட்சகர் செ.சத்திதரனும் "சமயமும் சமூகமும்" எனும் தலைப்பில் சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனனும் "தேசிய உருவாக்கத்தில் பண்பாட்டின் பங்கு" எனும் தலைப்பில் ஆசிரியரும் சமூக ஆய்வாளருமான பொன்.பிரபாகரனும் சிறப்புரைகளை வழங்குவர். (இ)



யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் புதிய அதிபராக திருமதி.மீனலோஜினி சுப்பிரமணியம் அண்மையில் கடமையேற்றுக்கொண்டார். புதிய அதிபர் வரவேற்கப்பட்டு சி.சிவராஜன் நினைவுப்பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# மகளின் தாக்குதலில் தாய் பலி;தந்தை காயம்!

(கஹவத்தை)

கஹவத்தை - மடலகம பிரதேசத்தில் மனநிலை பாதிக்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் தந்தை காயமடைந்துள்ளார்.

தாய் மற்றும் தந்தை மீது குறித்த மகள் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், இருவரும் படுகாயமடைந்த நிலையில் கஹவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கஹவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய யுவதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், யுவதிக்கு மன நிலை பாதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 100 | 160 |
| தக்காளி | 140 | 100 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 110 | 80 |
| கோவா | 100 | 60 | 75 | 80 |
| கரட் | 100 | 120 | 70 | 160 |
| பூசணி | 40 | 50 | 30 | 40 |
| புடோல் | 80 | 100 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 160 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 40 | 100 |
| பயற்றங்காய் | 180 | 140 | 130 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 70 | 140 |
| பீற்றூட் | 80 | 80 | 70 | 100 |
| கறிமிளகாய் | 120 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 250 | 320 |
| போஞ்சி | 200 | 220 | 150 | 320 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 30 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 260 | 180 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 150 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 300 | – | – | – |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | – | – | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா

## நிதியுதவி வழங்க அரச அதிகாரிகள் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட குப்பிளான் தெற்கில் மின்னல் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப் படவுள்ளது.

நேற்றுக் காலை 6 மணியளவில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் உடுவில் பிரதேச செயலர் ஜெயக்காந், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன், வலி தெற்கு பிரதேச சபை உறுப்பினர் அபராசுதன், கிராம உத்தியோகத்தர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அடங்கிய குழுவினர் மின்னல் அனர்த்தம் நிகழ்ந்த இடத்தைச் சென்று பார்வையிட்டதோடு உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கும் சென்றனர். இதன் போது சமுர்த்தி பாதுகாப்பு நிதியத்தின் மரணத்திற்கான கொடுப்பனவு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கொடுப்பனவு ரூபா ஒரு இலட்சத்தில் உடனடியாக 15 ஆயிரம் ரூபாவை குடும்பத்தினரிடம் அரச அதிபர் வழங்கினார்.

மேலும் உயிரிழந்தவர்களில் ஒருவருக்கான வீட்டுத்திட்டத்தினை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறும் அரச அதிபர் பணித்துள்ளார். அப்பகுதிகளில் அடிக்கடி மின்னல் தாக்கம் நிகழ்வதற்கான காரணம் பற்றி ஆராய்வதோடு அப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள இடிதாங்கிகள் இயங்கு நிலையில் இருக்கின்றதா மற்றும் உரிய தரத்தில் உரிய முறைப்படி பொருத்தப்பட்டுள்ளதா என உடனடியாக பரிசீலித்து நடவடிக்கையெடுக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-89)

# ஆளும் ஐ.தே.கவை வீழ்த்த பலமான கூட்டணி அவசியம்

## வாசுதேவ வலியுறுத்து



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரமல்ல பொதுஜன பெரமுனவும் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால் தோல்வியே கிடைக்கப்பெறும்.

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்த வேண்டுமாயின் பலமான கூட்டணியமைக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற பேச்சுவார்த்தைகள் பல கேள்விகளைத் தோற்றுவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒத்துழைப்பற்ற தன்மையின் காரணமாக பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் கூட்டணியமைப்பது பய னற்றது என்ற நிலைப்பாட்டில் உள்ளார்கள்.

இரு தரப்பினரது பலவீனமான செயற்பாடுகளும் ஐக்கிய தேசிய கட்சிக்கே பலமானதாக காணப்படும்.

இரு தரப்பிலும் காணப்படுகின்ற போட்டித்தன்மையால் தனித்து போட்டியிடுவது சிறந்தது என்று குறிப்பிடுவது தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு சாத்தியமற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தனித்து போட்டியிட்டு ஒரு போதும் வெற்றி பெறமுடியாது. சுதந்திரக் கட்சியின் பலம் எத்தன்மையானது என்பதை உள்ளூராட்சி சபை பெறுபேறுகளின் ஊடாக புரிந்து கொள்ளலாம்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்த வேண்டுமாயின் இருதரப்பினரும் விட்டுக்கொடுப்புகளுடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் குறித்து எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (இ-7)

# கல்வித்துறையின் முன்னேற்றம் குறித்து யுனெஸ்கோவில் இலங்கை விளக்கம்




(பாரிஸ்)

யுனெஸ்கோ அமைப்பின் 206 ஆவது நிறைவேற்று சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடைபெற்றது. அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரி அசுலே இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்த அவர் உரையாற்றுகையில்,

யுனெஸ்கோ அமைப்பு தற்காலத்தில் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது.

யுனெஸ்கோ அமைப்பின் நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் பல்வேறு துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

விசேடமாக கல்வி, பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி, ஊடக சுதந்திரம், வன்முறை மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராக போரிடுவது போன்ற விவகாரங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டின் போது சவால்களுக்கு வெற்றி[illegible] முகம்கொடுப்பதற்கு கல்வி [illegible] அவசியமாகும். மேலும் கல்வியின் புதிய தரத்தை அபிவிருத்தி செய்வதற்காக அடுத்த யுனெஸ்கோ பொதுக்கூட்டத் தொடரின் போது கல்வித் தகைமைகளை ஏற்றுக்கொள்வதற்கான பிரகடனமொன்றை முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவித்தார்.

யுனெஸ்கோ நிறைவேற்று சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கைக்கான யுனெஸ்கோ அமைப்பின் தலைவரும் அவ்வமைப்பின் நிறைவேற்று சபையின் உறுப்பினருமான கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உரை நிகழ்த்துகையில்,

கல்வித்துறையில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் [illegible] விளக்[illegible] [illegible]த்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 40

## வடக்கு வர்த்தகர் படும் பாடு

மீற்றர் வட்டி-ஸ்பீடு வட்டி-கந்துவட்டி-
நாள் வட்டி-மணி வட்டி
மைக்றோ லோன்-பிஸ்னஸ் லோன்-
குழு லோன்-ஓவர் ட்ராப்டு
வர்த்தகரை லோன் மிதிக்க
பாங் வதைக்க வட்டிக்காரன் கொல்ல
விழி பிதுங்க தாலிக்கொடி அடகில் போக
வீடுமது ஏலம் போக
வாழுங்கால நரகமிகு வர்த்தகர் படும்பாடு
யாரறிவார் பராபரனே.

லோனுக்கு வட்டி கட்ட மேலதிகப்
பற்றெடுத்து பற்றினை செற்றில் செய்ய
செக்கையும்தான் கொடுத்து மீற்றர் வட்டி
தானெடுத்து செக் திரும்ப
காசோலை மோசடியென்று பொலிஸ் பிடித்து
நீதியின் படியேற்ற
வக்கீலின் கால்பிடித்து பிணை வாங்க
பெருந்தொகையைக் கொடுத்து
பிணையாளி தேடி பிடிபணத்தைக்கொடுத்து
பிணை வைத்து வருவதற்குள்
தாலியறுந்து போகிறது மாதாந்தம்
காசு கட்ட கூண்டேறி மீண்டும்
வக்கீல் தனைநாடி காசும் கைமாறி
வக்கீல் பீசும் கைமாறி அப்பப்பா

வர்த்தகர் துயர் தீர்த்தவரை தூக்கித்தான்
நிமிர்த்தி வைக்க யார் வருவார்
வங்கிகள் அவர் இடர் தீர்க்குமா?
மீற்றர் வட்டியின் கொட்டமடங்குமா?
வீழ்ந்தவர் துயர் தீர்க்க அரச உதவிகள்
ஏதும் கிடைக்குமா?
கொடுகடன் தகவல் பணியகத்தின்
கொடும்பிடிகள் யுத்தம் அழித்த
வடக்கிலும் கிழக்கிலும் கொஞ்சம் தளருமா?

ச.நித்தியானந்தன்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை குறைந்த வரிகளில் பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# இதுவே அரசின் இறுதிப் புத்தாண்டு

## மகிந்தானந்த உறுதி



(நாவலப்பிட்டி)

இம்முறை கொண்டாடிய புத்தாண்டே அரசாங்கத்தின் இறுதிப் புத்தாண்டு என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ரணில் அரசாங்கத்தை தோற்கடிப்பதே மக்களின் பிரதான கோரிக்கையாக மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டிய பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான குடிநீர் கேட்கும் எமக்கு மதுபான சாலையா தீர்வு

## பரந்தன் மக்கள் கவனயீர்ப்பு



(பரந்தன்)

சுத்தமான குடிநீர் கேட்கும் எமது கிராமத்திற்கு மதுபான சாலையா தீர்வு எனக் கேட்டு கிளிநொச்சி பெரிய பரந்தன் கிராம மக்கள் ஐந்தாவது தடவையாக புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக முன்றலில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிராகவே இந்தக் கவனயீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமது பிரதேசத்தில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கான முயற்சிகள் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக கிராம மக்களும் கடந்த இரண்டு வருடங்களாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எங் கள் கிராமத்தில் இவ்வாறு புதிய மதுபானசாலை ஒன்று அமை வது எமது வாழ்க்கையை சீரழிக்கும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் "வேண்டாம் வேண்டாம் மது பான சாலை வேண்டாம், குடிப்பதற்கு சுத்தமான நீரை வழங்கு மதுபானத்தை அல்ல, குடிநீர்க்கு போராடும் எங்களுக்கு மதுபான சாலையா? பெரிய பரந்தன் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் மதுபானசாலை வேண்டாம், மாணவிகள்,பெண்களின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தும் மதுபானசாலை வேண்டாம்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (7-312)

# மாதாந்த பௌர்ணமிக் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திச் செயலணியின் மாதாந்த பௌர்ணமி கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் 5 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள கிளிநொச்சி மாவட்ட செயலகப் பயிற்சி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சிறப்புப் பேச்சாளராக வைத்திய கலாநிதி மா.ஜெயராஜா கலந்துகொண்டு "போருக்கு பின்னரான உளசமூகப் பிரச்சினைகளும் தலையீடுகளும்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

இம்மாதாந்தக் கலந்துரையாடலானது கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கலந்துரையாடலில் ஆர்வலர்களைக்கலந்து கொண்டு பயன் பெறுமாறும் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறும் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அபிவிருத்திச் செயலணியின் தலைவர் வைத்தியகலாநிதி மு.சிறிதர் அறிவித்துள்ளார். (7)

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; இரு சந்தேக நபர்கள் கைது

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி விடுதி ஒன்றில் நபர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்கள் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியாகொட மேல் மாகாண குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கடவத்த மற்றும் சீதுவ பிரதேசங்களில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# வவுனியாவில் கடும் வெப்பநிலை; மக்களின் இயல்பு நிலை பாதிப்பு



(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பநிலை நீடித்து வருகின்றது. இதன் காரணமாக மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக 39 பாகை செல்சியஸ்க்கு அதிகமான வெப்பநிலை நீடித்து வருவதனால் கடுமையான வரட்சி நிலை நீடிக்கின்றது.

கிணறுகள், குளங்களின் நீர்மட்டமும் சடுதியாக குறைவடைந்துள்ளமையால் மக்களது தோட்டப் பயிர்ச்செய்கை, நெற்செய்கை என்பன பாதிப்படைந்துள்ளன. பலரது தோட்டங்கள் கடும் வரட்சியினால் பாதிப்புற்று அழிவடைந்து காணப்படுவதனால் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றன.

ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் நீர் இன்றியும் மேய்ச்சல் புற்றரைகளின்றியும் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளதுடன் வெப்பம் காரணமாக நோய்த்தாக்கத்திற்கும் உள்ளாகி உள்ளன. (7-250)

# மாஞ்சோலை வைத்தியசாலையில் சேவையைப் பெறுவதில் சிரமம்

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட வைத்தியசாலையான மாஞ்சோலை வைத்தியசாலையில் மருத்துவ சேவையினை பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை இன்றும் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் மாவட்ட வைத்தியசாலை பல்வேறு குறைகளுடன் காணப்படுவதாக மாவட்ட மக்களால் சுட்டிக்காட்டப்பட்டு கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு மனுவும் கையளிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை துணுக்காய் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக குறித்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போது மறுநாள் பிரேத பரிசோதனை செய்ய முடியாத நிலையில் சடலம் பாதுகாப்பாக வைக்கப்படவில்லை. இதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

இவ்வாறு சுமார் நூறு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் இருந்து மாவட்ட வைத்தியசாலைக்கு சடலத்தை ஒப்படைத்தும் சரியான சேவையை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரித்துள்ளார்கள். (7-286)

# கற்றாழை அகழ்வுக்குத் தடை; அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தல்





(மன்னார்)

மன்னார் வங்காலை கற்றாளம்பிட்டிப் பகுதியில் கற்றாழைச் செடிகளை பிடுங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக மன்னார் நானாட்டான் பிரதேச சபைக்குட்பட்ட வங்காலை கற்றாளம் பிட்டி பகுதியில் சட்ட விரோதமாக கற்றாழைச் செடிகள் அகழ்வு செய்யப்பட்டு தென் பகுதிக்கு கடத்தப்பட்ட நிலையிலேயே அண்மையில் இடம்பெற்ற நானாட்டான் பிரதேச சபை மாதாந்த அமர்வில் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஞானராஜ் சோசையால் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது.

இதன் அடைப்படையில் கற்றாழை அகழ்வு தடை செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக மும்மொழியினாலான அறிவித்தல் பலகை நானாட்டான் பிரதேச சபையால் கற்றாழைச் செடிகள் காணப்படும் பிரதேசமான வங்காலை கற்றாலம்பிட்டி பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (7-285)

# நுவரெலியாவில் புடிங் செய்து உருளைக்கிழங்கு செய்கை ஊக்குவிப்பு



(நுவரெலியா)

நுவரெலியாவில் பயிர்ச் செய்கை செய்யப்படும் உருளைக் கிழங்கை உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்யும் நோக்கில் 25 கிலோ கிராம் நிறையுடைய உருளைக்கிழங்கு புடிங் தயாரிக்கப்பட்டுள்ளது.



உருளைக்கிழங்கு புடிங் தயாரிப்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் குமார் சங்ககார ஆகியோர் கலந்து கொண்டனர். (7)

# மெதடிஸ்த மத்திய நிலையம் மீது குண்டச்சாம் குளமக்கள் தாக்குதல்

அநுராதபுரம் குண்டச்சாம்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்குச் சொந்தமான மெதடிஸ்த மத்திய நிலையம் அப்பகுதி மக்களால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. அதுவும் தமிழ்-சிங்களப் புத்தாண்டு தினத்தன்று திருச்சபையின் பேராயர் அதிவணக்கத்துக்குரிய ஆசிரிபெரேரா கலந்து கொண்டிருந்த கூருத்தோலை வழிபாட்டின்போது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக இப்பிரதேசத்தில் உள்ள பொது மக்களால் இந்த மெதடிஸ்த மத்திய நிலையத்தில் உள்ள குருவானவருக்கும் சபையாருக்கும் தொடர்ச்சியான இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடந்த 14 ஆம் திகதி தமிழ்-சிங்கள் புத்தாண்டு தினத்தன்று பேராயர் அங்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் கல்லுகள் எறிந்தும் பட்டாசுகள் கொளுத்தப்பட்டும் திருச்சபை மக்களும் பேராயருக்கு எதிராக கூச்சல் இட்டும் குழப்பத்தை ஏற்படுத்தி, மெதடிஸ்த மத்திய நிலையத்தை விட்டு வெளியேற விடாமல் தடுத்தும் அங்குள்ள நுழை வாயிலை பூட்டியும் தொடர்ச்சியாக 45 நிமிடங்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நிலைமையைக் கட்டுப் பாட்டுக்குக் கொண்டுவர இறுதியில் பேராயர் ஆசிரிபெரேரா அப் பிரதேச பொலிஸ்நிலையத்துடன்தொடர்ப்பு கொண்டு, பின்னர் பொலிஸாரின் உதவியுடன் அங்கிருந்து வெளியேறி சென்றுள்ளனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எழுச்சியே கூட்டமைப்புக்கு அரசாங்கம் பணம் இறைக்க காரணம்

## கஜேந்திரன் காட்டம்



(குருமன்காடு)

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எழுச்சியே கூட்டமைப்புக்கு அரசாங்கம் கம்பரெலிய திட்டம் மூலம் பணத்தை வாரியிறைக்க காரணம் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா புளியங்குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷவை பதவிக்கு வர விடக்கூடாது என்பதற்காகவே நாம் இந்த அரசிற்கு ஆதரவை வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அவர் ஆட்சியில் இருக்கும் போது சர்வதேச விசாரணையை நடத்த முடியாது. அவரை அந்த பதவியில் இருந்து வீழ்த்தி சரியான ஒருவரைக் கொண்டு வந்தால் மாத்திரமே சர்வதேச விசாரணை நடத்த முடியும் என்று மக்களிடம் சொன்னார்கள்.

அவரிடம் நான் கேட்கிறேன் தேர்தலிற்கு பின்னர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக ஜெனிவாவிற்குச் சென்று உள்ளக விசாரணைக்கு சந்தர்ப்பம் கொடுங்கள் என்றும், சர்வதேச விசாரணை வேண்டாம் என்றும் அது முடிந்துவிட்டது என்றும் கூறினீர்களே. எனவே மக்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்டு அவர்களின் காதிலே தொடர்ந்தும் பூச்சுற்றிக் கொண்டு கிடைக்கும் சுகபோகங்களைப் பெற்று உங்களது குடும்பங்களை வாழவைக்கும் செயற்பாட்டையா மேற்கொண்டு வருகின்றீர்கள்.

மக்களின் உணர்வுகளை புறம்தள்ளிவிட்டு மக்களை முட்டாள் ஆக்கும் கதைகளை தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்க வேண்டாம் என உங்களிடம் கேட்கின்றேன்.

சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்தும் ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கு ஆதரவு கொடுத்துவிட்டு, இந்ததீவில் வேறு எதை நீங்கள் எதிர்பார்கின்றீர்கள். அப்படியான அரசியல் யாப்பிற்கு பாராளுமன்றத்தில் முன்மொழிவை வழங்கிவிட்டு தமிழ் மக்களுக்கு சமஷ்டியை வழங்கப் போவதாக ஒரு போலி தோற்றப்பாட்டை காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது தமிழ்தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு அரசியல்தீர்வு. அதனை கைவிட்டு சர்வதேச மட்டத்திலே அரசை பிணை எடுக்கும் வேலையையே கூட்டமைப்பு செய்து வருகின்றது.

அது தமிழ் மக்களின் 60 வருட கோரிக்கைகளை நீங்கள் கைவிட்டுவிட்டீர்கள் என்பதாகவே அமைகின்றது. தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவோம் என்ற பூச்சாண்டியை காட்டிக்கொண்டு இன்னும் எத்தனை காலம் இவர்கள் கடத்தப் போகின்றார்கள்.


கூட்டமைப்புக்கு அடுத்த சக்தியாக முன்னணி எழுச்சி பெற்றமையால் கம்பரெலிய கிடைத்திருக்கிறது. இதுபற்றி மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இவர்கள் சலுகை அரசியலை காட்டுவது தமிழ் இனத்திற்கு செய்யும் துரோகமாகவே அமையும். ஒற்றையாட்சி அரசியலைப்பிற்கு ஆதரவு வழங்குகின்றார்கள். ஜெனிவாவிற்குச் சென்று அரசிற்கு கால அவகாசம் கொடுக்கிறார்கள்.

எனவே எமது மக்கள் நன்றாகச் சிந்திக்க வேண்டும். இனியும் சிந்திக்கத்தவறினால் இந்த தீவு சிங்கள தீவாக வெகுவிரைவில் மாறும் என மேலும் தெரிவித்தார். (7-250)




# கிளிநொச்சியில் நிரந்தர பயிர்ச்சிகிச்சை முகாம்





(கிளிநொச்சி)

விவசாய பெருமக்களின் பயிர்ச்செய்கையில் ஏற்படக்கூடிய பூச்சி பீடைகள் மற்றும் நோய்த்தாக்கத்தினை அடையாளம் கண்டு உடனுக்குடன் தீர்வு வழங்கும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தால் பிரதி 2ஆவது மற்றும் 4ஆவது செவ்வாய்க்கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் 8மணி வரை கிளிநொச்சி பொதுச் சந்தையில் நிரந்தர பயிர்ச்சிகிச்சை முகாம் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு கடந்த 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாக தேசிய விவசாய தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் பணிப்பாளர் சி.பெரியசாமி மற்றும் கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே. அரசகேசரியின் பங்குபற்றுதலுடன் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தின் பாடவிடய உத்தியோகத்தர்களும், விவ சாயப் போதனாசிரியர்களும் விவசாயிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட பயிர்ச்செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கியிருந்தனர். மேலும் குறித்த முகாமில் விவசாய தொழில்நுட்ப வழிகாட்டல் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. அத்துடன் வருகை தந்த விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி பொருட்களின் சந்தைப்படுத்தலில் "கொவி பொல" எனும் செயலி சம்பந்தமாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆர்வமுள்ள விவசாயிகள் குறித்த தினங்களில் கிளிநொச்சி பொதுச்சந்தையில் இயங்கிவரும் நிரந்தர பயிர்ச்சிகிச்சை முகாமிற்கு வருகை தந்து தீர்வுகளையும் வேண்டிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார். (7)

# இரு குழுக்கள் மோதல்; மேலும் ஒருவர் படுகாயம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பிரமந்தனாறு மற்றும் கல்லாறு பகுதியில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாக தெரிவித்து இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இன்னுமொருவர் நேற்றுமுன்தினம் காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி கல்லாறு மற்றும் பிரமந்தனாறு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவரும் ராஜா குழுவினர் என்ற குறிப்பிட்ட சிலர் கூரிய ஆயுதங்கள் மற்றும் வாள் என்பவற்றுடன் தொடர்ந்தும் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த குழுவினர் தாங்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்கள் எனத்தெரிவித்து நேற்று இப்பிரதேசத்தைச்சேர்ந்த ஆறு பேர்மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதில் நான்கு பேர் வாள் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியநிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் பிரமந்தனாறுப்பகுதிக்குள் கூரிய வாள் மற்றும் ஆயுதங்களுடன் மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். (7-315)

# வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்





(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஊடாக துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கோணாவில் காந்திக்கிராம வீதிப் புனரமைப்பிற்காக இரண்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அவ்வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன், கோணாவில் மகாவித்தியாலய ஆசிரியர் சி.சிவேந்திரன் மற்றும் காந்திக்கிராமம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (7)

# மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு





(குருமன்காடு)

கிளிநொச்சி விவேகானந்த நகரில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கிளிநாச்சி விவேகானந்தநகர் பொதுநோக்கு மண்டப வளாகத்தில் இடம்பெற்றது.

குறித்த நகரில் 2017ஆம் ஆண்டு உயர்தரம், 2018ஆம் ஆண்டு சாதாரண தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளில் தோற்றி சாதனை நிலை நாட்டிய மற்றும் அதிக புள்ளிகளை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வாக இடம் பெற்றது. (7-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்பட விவகாரம்

# வேலூர் தொகுதிக்கான தேர்தலை ரத்து செய்ய ஜனாதிபதி ராம்நாத் ஒப்புதல் அளிப்பு



(வேலூர் )

வேலூர் தொகுதி லோக்சபா தேர்தலை ரத்து செய்ய, இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார்.

தமிழகத்தின் வேலூர் லோக்சபா தொகுதியில் தி.மு.க சார்பில், தி.மு.க பொருளாளர் துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்த், அ.தி.மு.க. கூட்டணி சார்பில் புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், அ.ம.மு.க சார்பில் பாண்டுரங்கன், மக்கள் நீதி மய்யம் சார்பில் சுரேஷ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், வேலூர் தொகுதி வாக்காளர்களுக்கு கொடுக்க பணம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக வந்த தகவலையடுத்து, துரைமுருகன் வீடு, அவருடைய மகன் கதிர் ஆனந்துக்கு சொந்தமான இன்ஜினீயரிங் கல்லூரி மற்றும் அவருடைய உறவினர் வீடுகளில் வருமான வரித்துறை மற்றும் தேர்தல் பறக்கும்படையினர் அதிரடி சோதனை நடத்தி, 11.53 கோடி ரூபாயை கைப்பற்றினர்.

இதுகுறித்து, தேர்தல் கமிஷன் சார்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக அந்த தொகுதியில் தேர்தலை ரத்து செய்வது குறித்து தேர்தல் ஆணையகம் ஆலோசித்து வருவதாக கடந்த திங்கட்கிழமை இரவு செய்தி பரவியது.

இந்நிலையில்நேற்று முன்தினம்இரவு, வேலூர்லோக்சபா தொகுதியின் தேர்தலை ரத்து செய்ய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார். (7)

# தேர்தல் ஆணையகத்தின் செயற்பாடு முற்றிலும் சீர்குலைந்து விட்டது

## ஜனாதிபதிக்கு முன்னாள் நீதிபதிகள் கடிதம்

(டில்லி)

தேர்தல் ஆணையகத்தின் செயற்பாடு முற்றிலும் சீர்குலைந்து விட்டதாக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு முன்னாள் நீதிபதிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் கடிதம் எழுதியுள்ளனர்.

மத்திய தேர்தல் ஆணையகத்தின் செயற்பாடுகள் அதன் நம்பகத்தன்மையை பாதித்து இருப்பதாக ஏற்கனவே முன்னாள் உயர் அதிகாரிகள் பலர் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு கடிதம் அனுப்பி இருந்தனர்.

இப்போது முன்னாள் உயர் அதிகாரிகள் 80 பேர் கையெழுத்திட்டு புதிதாக ஒரு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளனர். அதில் முன்னாள் டில்லி பொலிஸ் ஆணையகம் ஆர்.எஸ்.குப்தா, முன்னாள் விமானப்படை துணை தளபதி ஆர்.சி.பாஜ்பாய், முன்னாள் வெளிவிவகார உயர் அதிகாரி அசோக் குமார், முன்னாள் இராணுவ துணை தளபதி ஏ.கே.ஷானி மற்றும் முன்னாள் உயர் இராணுவ அதிகாரிகள், நீதிபதிகள், ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் எனப் பலரும் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் கூறியிருப்பதாவது,

தேர்தல் ஆணையகம் மீது அதிருப்தி தெரிவித்து நாங்கள் ஏற்கனவே தங்களுக்கு கடிதம் அனுப்பி இருந்தோம். இதன் பிறகும் கூட தேர்தல் ஆணையகத்தின் போக்கில் மாற்றம் தென்படவில்லை.

இப்போது தேர்தல் ஆணையகம் நடந்து கொள்ளும் விதத்தை பார்க்கும் போது அதன் மீதான நம்பகத்தன்மை கவலை அடையச் செய்கிறது.

தேர்தல் ஆணையகம் மீதான களங்கம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது.

இவர்களால் நேர்மையான முறையில் தேர்தல் நடத்த முடியுமா? என்ற சந்தேகம் அதிகரித்திருக்கிறது.

அதற்கான திறன் தேர்தல் ஆணையகத்திடம் தென்படவில்லை.

அதன் செயற்பாடுகள் முற்றிலும் சீர்குலைந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கடிதத்தில் கூறியுள்ளனர். (7)

## ஏமனில் உள்நாட்டுப்போர்

# அமெரிக்கப்படைகளை வாபஸ்பெறும் தீர்மானத்தை நிராகரித்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

ஏமனில் உள்நாட்டுப் போரில் அமெரிக்க இராணுவத்தினர் பங்களிப்பை நிறுத்துவதற்காக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ட்ரம்ப் நிராகரித்தார்.

இதுகுறித்து ட்ரம்ப் கூறும்போது, "இத்தீர்மானம் நமது அரசியலமைப்பைச் சேர்ந்த அதிகாரிகளை பலவீனப்படுத்துவதற்கான தேவையற்ற மற்றும் ஆபத்தான முயற்சியாகும். மேலும் இது அமெரிக்க குடிமக்கள் மற்றும் நாட்டுக்காக சேவை புரிபவர்களைப் பாதிக்கும்" என்றார்.

ஏமன் அரசுடன் இணைந்து சவுதி நடத்தும் தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை முன்னரே கண்டித்தது. ஏமனிலிருந்து அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற- வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இதனைத் தொடர்ந்தே அமெரிக்க நாடாளுமன்ற அவையில் குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏமனில் போரை நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தனர்.

நாங்கள் உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளவர்களுக்கு உதவியுள்ளோம். ஏமன் போரில் அமெரிக்கப் படைகள் பங்கேற்று இருப்பது அவமானகரமானதுதான். ஈராக், சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியே கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆர்வமாக இருக்கிறார்.

ஆனால் ஏமனிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவது குறித்து அவர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவி ல்லை என்று அமெரிக்க நாடாளு மன்ற உறுப்பினர்கள் முன்னரே தெரிவித்தனர்.

இந்நிலையில் ட்ரம்ப்பின் இந்த முடிவு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை கோபமடையச் செய்துள்ளது. (7)

# பாகிஸ்தானில்

# 25 பேர் உ

## மீனவர்கள், சிறுமிகள்








(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் பஞ்சாப் மற்றும் சிந்து தாக்கிய புயல், மழை, புழுதிப்புயல உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.**

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப், சிந்து, பலூசிஸ்தான், கைபர் பக்துங்வா மாகாணங்களில் நேற்று இடி, மின்னலுடன் கடும் மழை பெய்தது. பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணங்களில் புயல் மற்றும் அசுர வேகத்தில்

# சிலியில் விமான விமானி உட்பட 6





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# ல் புழுதிப்புயல் உயிரிழப்பு!

## ர் உட்பட நால்வர் மாயம்



### சிந்து மாகாணத்தை புயலுக்கு 25 பேர் ர்.

புழுதிப்புயலும் தாக்கியது. இதில் பல பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்தன.

வீடுகள் இடிந்து விழுந்து சேதமடைந்தன. தாழ்வான பகுதிகள் அனைத்தும் வெள்ளக் காடாக காட்சி அளிக்கின்றன.

புயலின் தாக்கத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட கராச்சியில் மீனவர்கள், சிறுமிகள் உட்பட நான்கு பேர் காணாமல் போனதாகவும் அவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# ன விபத்து 6பேர் பலி

(சாண்டியாகோ)

சிலியில் இடம்பெற்ற விமான விபத்தில் விமானி உள்ளடங்கலாக 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

மூன்று ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் சகிதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பயணித்த சிறிய ரக விமானமொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளானது.

தெற்கு சிலியிலுள்ள பொயெர்டோமொன்ட் என்ற நகரிலுள்ள வீட்டின் மீது மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.


விபத்தினால் வீட்டின் கூரை தீப்பற்றி எரிய தொடங்கியது. இந்நிலையில், தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

8 பேர் சகிதம் இந்த விமானம் பயணிக்கவிருந்த போதும், இறுதி நேரத்தில் மூவர் விமானத்தில் செல்லவில்லை.

விபத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (7)

# பாரிஸ் தேவாலய தீ விபத்து மனதை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது

## ஐ.நா.தலைவர் வேதனை



(ஜெனிவா)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள நோட்ரே டேம் தேவாலயத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற தீவிபத்து மனதை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் மரியா பெர்னாண்டா எஸ்பினோசா வேதனையடைந்துள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்த அவர், பிரான்ஸ் மக்களுடனும் அரசாங்கத்துடனும் துணை நிற்பேன் என்றும் கூறியுள்ளார்.

டுவிட்டர் பக்கத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "நோட்ரே டேம் தேவாலயம் தீயில் எரிந்து கொண்டிருக்கும் புகைப் படங்கள் மனதை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய பாரம்பரியத்தின் பொக்கிஷங்களுள் கதீட்ரல் தேவாலயம் ஒன்றாகும். கடந்த 1991 ஆம் ஆண்டு ஐ.நா.வில் கதீட்ரல் தேவாலயம், உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது. இந்த சம்பவத்தில் துயருற்றிருக்கும் பிரான்ஸ் மக்களுடனும் அரசாங்கத்துடனும் துணை நிற்பேன்" என பதிவிட்டுள்ளார். (7)

# தீ விபத்து ஏற்பட்ட பாரிஸ் தேவாலயம் ஐந்து வருடங்களில் சீரமைக்கப்படும்

## பிரான்ஸ் ஜனாதிபதி உறுதி



(பாரிஸ்)

850 ஆண்டுகள்பழைமையான உலகப் புகழ்பெற்ற பிரான்ஸ் தேவாலயத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்ட நிலையில், அவை 5 வருடங்களில் சீரமைக்கப்படும் என்று ஜனாதிபதி மெக்ரான் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நோட்ரே-டேம் என்ற இடத்தில் உலகப் புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயம் உள்ளது. 850 ஆண்டுகள் பழைமையான இந்த தேவாலயம் அந்நாட்டின் வரலாற்று சின்னமாக பார்க்கப்படுகிறது.

அந்த தேவாலயத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு திடீரென தீப்பிடித்தது. சில நிமிடங்களில் தீ, தேவாலயம் முழுவதும் பரவி கொழுந்து விட்டு எரிந்தது. தீ மளமளவென மற்ற இடங்களுக்கும் பரவியதால் தேவாலயத்தின் மேற்கூரை மற்றும் பக்கவாட்டு சுவர்கள் பலத்த சேதமடைந்து இடிந்து விழுந்தன. அத்துடன் தேவாலயத்தின் 2 கோபுரங்களில் ஒன்று முற்றிலுமாக எரிந்து போனது.

தீ விபத்து குறித்து தெரியவந்ததும், சம்பவ இடத்திற்கு விரைந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் நிலைமையை ஆய்வு செய்தார். பின்னர் அவர் தெரிவிக்கும் போது,

இந்த தீ விபத்து ஒரு மிக மோசமான சோக நிகழ்வு, இந்த விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து புகழ்பெற்ற இந்த தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம். இதற்காக சர்வதேச அளவில் நிதி திரட்டும் பணி தொடங்கப்படும். தேவாலயத்தை ஏற்கனவே இருந்ததைவிட மிக அழகாக கட்டுவோம். அடுத்த 5 வருடத்திற்குள் தேவாலயம் கட்டிமுடிக்கப்பட வேண்டும்என்று தான் விரும்புகிறேன். மனித தவறுகளால் ஏற்படும் பாதிப்புகளை நிறைய முறை சரிசெய்துள்ளோம். அந்த வகையில் இதையும் விரைந்து சரிசெய்வோம் எனத் தெரிவித்தார். (7)

# தீ விபத்து உள்ளுணர்வை ஆழமாக பாதித்துள்ளது

## யுனெஸ்கோ தலைவர் கவலை



(பாரிஸ் )

நோட்ரே டேம் தேவாலயத்தில் ஏற்பட்ட இந்த தீ விபத்து உள்ளுணர்வை ஆழமாக பாதித்துள்ளது என யுனெஸ்கோ தலைவர் ஓட்ரி அசூலே தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பாரிஸ் மக்களுடன் யுனெஸ்கோ எப்போதும் உறுதுணையாக நிற்கும் எனத் தெரிவித்த அவர், விலை மதிப்பில்லாத இந்த பாரம்பரியத்தினை மீட்க நாங்கள் என்றும் துணை நிற்போம் எனவும் கூறியுள்ளார்.

அத்தோடு இவ்விடயம் தொடர்பாக யுனெஸ்கோ தற்போது கண்காணித்து வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்தமத போதகர்களான பிக்குமார்

# நீதிமன்றத்தின் வாசற்படியைக் கூட மிதிப்பதை நான் விரும்பவில்லை!

## நீதியமைச்சர் தலதா கரிசனை

(இரத்தினபுரி)

பிக்குமார்களுக்கு தனியாக நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் எனக்கு உடன்பாடில்லை.

உன்னதமான புனிதம் மிக்க பௌத்த மத போதகர்களான பிக்குமார்களை சாதாரண நீதிமன்றத்தின் வாசற்படியைக் கூட மிதிக்க வைக்க நான் விரும்பவில்லை என நீதி மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

இரத்தினபுரி போதிராஜாராமய விகாரையின் நான்கு மாடிக் கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நான் அமைச்சராக பதவியேற்ற பின்னர் மகாநாயக்கர்களிடம் ஆசிபெறச்சென்ற போது பிக்குகளுக்கு தனியாக நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

எனினும் அதில் எனக்கு உடன்பாடில்லை. சாதாரண நீதிமன்றங்களில் பௌத்த பிக்குமார் ஆஜராவதற்கு தனியான ஒரு தினத்தை ஒதுக் கிக்கொடுக்குமாறு கேட்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மத்திய, வடமேல் மாகாணங்களில் தனி



யான ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல ஏனைய மாகாணங்களிலும் அதற்குரிய ஒழுங்குகளை செய்து கொடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'ஐஸ்' வைத்திருந்த சட்டத்தரணி கைது!

(கொள்ளுப்பிட்டி)

"ஐஸ்" எனப்படும் போதைப் பொருளுடன் சட்டத்தரணி ஒருவர் உள்ளிட்ட மூவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 33,36,38 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வாசனைத் திரவியங்களால் இலங்கையர்களுக்கு ஆபத்து

## பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வாசனைத் திரவியம் பயன்படுத்தும் இலங்கையர்களுக்கு நுகர்வோர் விவகாரங்கள் ஆணையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயன்பாட்டிற்குத் தகுதியற்ற வாசனைத் திரவியங்கள் மற்றும் சவர்க்காரங்கள் இலங்கைச் சந்தையில் இறக்குமதி செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்துபவர்கள் அதன் தரம் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

புத்தாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டதாக அந்த ஆணையகத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்த இந்த சுற்றிவளைப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டுபாயில் மதூஷுடன் கைதான மேலும் 6 பேர் நாடு கடத்தல்!

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவன் மாகந்துரே மதூஷுடன் டுபாயில் கைது செய்யப்பட்ட மேலும் 6 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நாடு கடத்தப்பட்ட 6 பேரில் மாகந்துரே மதூஷின் உறவினர் ஒருவரும் அடங்குகின்றார்.

டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்ட இவர்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று அதிகாலை 4.45 மணியளவில் வந்தடைந்த போது, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்று விசாரணை செய்து வருகின்றனர்.

முஹம்மட் நிஸான், முஹம்மட் பதூர்தீன், கயான் புத்திமா, முஹம்மட் ஜாபீர், ஆர்.சுரேஷ், எச்.ரூபதாஸ்சைமன், எஸ்.நிலான் றோமேஷ் ஆகியோரே நாடு கடத்தப்பட்டுள்ளனர். கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி டுபாயில் ஆடம்பர ஹோட்டலொன்றில் மாகந்துரே மதூஷ் உட்பட 31 பேர் டுபாய் பொலிஸாரால் கைது செய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புகையிரத போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது



புகையிரத சேவை நேற்று வழமை போன்று இடம்பெற்றதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புகையிரதம் தடம்புரண்டதால் புகையிரத போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டதாகவும் நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் புகையிரத போக்குவரத்து அத்தியட்சகர் ஏ.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த புகையிரதம் கிருலப்பனை பகுதியில் தடம்புரண்டதுடன், காலியில் காலுகுமாரி புகையிரதமும் தடம்புரண்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று புகையிரத போக்குவரத்துச் சேவை வழமைக்குத் திரும்பி விட்டதாக புகையிரத போக்குவரத்து அத்தியட்சகர் ஏ.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எடைக் குறைப்பு

ஒருத்தர் சேமிப்பு பழக்கத்தில் மிகவும் கெட்டிக்காரர். பணத்தைச் சேமித்தார், பொருளைச் சேமித்தார், புகழைச் சேமித்தார். அதுவரைக்கும் சரி. அதேமாதிரி உடலில் கொழுப்பையும் சேமிக்க ஆரம்பித்தார். உடம்பு பெருத்துப் போய்விட்டது. சேமிப்புப் பழக்கம் நல்லதுதான் அதற்காக இப்படியா?

சிலர் குண்டாக இருப்பார்கள். 'என்ன சேர் கொஞ்சம் குறைக்கக் கூடாதா' என்று கேட்டால் இது ஒன்றும் அதிகமில்லை சேர். நோர்மல் என்று சொல்லுவார். அப்படி என்றால் இன்னமும் உடம்பு வைக்கும் போல இருக்கு!

உடல் பெருத்துக்கொண்டே போனால் அது மிகவும் கவனிக்க வேண்டிய ஒரு விடயம். ஒருவருக்கு இப்ப உள்ள உடம்பு சரியா இருக்கா? அல்லது பெருத்திருக்கா? என மருத்துவ ரீதியாக எவ்வாறு கண்டுபிடிப்பது? அதற்கு ஒரு சின்னக் கணக்கு இருக்கு, இதற்கு 'கல்குலேட்டர்' தேவையில்லை. நீங்களே போட்டுப் பார்க்கலாம். உங்கள் மார்பளவு, வயது, உயரம் எல்லாவற்றையும் சேர்த்துக் கூட்டுங்கள். இதில் உங்கள் எடை சுமார் 10 சதவீதம் அதிகமாய் இருந்தால் நீங்கள் குண்டு என்பது சந்தேகமில்லை.

குனிந்து நில்லுங்கள். உங்கள் விலா எலும்புக்கு கீழே தோள் ஒரு அங்குலத்திற்குக் கீழே தொங்கினால் உங்கள் உடம்பு பெரிதுதான். சந்தேகமே வேண்டாம்! சரி இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? உணவுப் பழக்கம், இயந்திர வாழ்க்கை, போதுமான அளவுக்கு உடற்பயிற்சி, உடல் உழைப்பு இவை இல்லாமல் இருப்பதுதான்.

அப்பா, அம்மா குண்டாக இருந்தால் குழந்தையும் குண்டாகப் பிறக்குமாம்? 100 இல் 40 பேருக்குத்தான் இப்படிப் பிறக்கின்றது.

அதேபோல் அப்பா, அம்மா இரண்டு பேரும் ஒல்லியாக இருப்பார்கள். அவர்களில் 10 சதவீதம் பேருக்கு குழந்தை குண்டா இருக்கின்றது. அதனால் பாரம்பரியத்தை இதற்கு ஓர் முக்கிய காரணமாகச் சொல்ல முடியாது!

குழந்தை 'கொழு கொழு' என இருக்க வேண்டும் என்பதற்காக சில தாய்மார் அடிக்கடி எதையாவது கொடுத்து சாப்பிடச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

மருமகளுக்கு பிரசவம் என்றால் அந்தப் பெண்ணை அசையாமல் ஒரே இடத்தில் உட்கார வைத்து சமைத்துக் கொடுக்கும் மாமிமார்கள் இருக்கின்றார்கள்! ஆச்சரியப்பட வேண்டாம். இது நல்லதல்ல. உடம்பு பெருத்துவிடும்.

பிரசவத்திற்கு முன்னாடியும் பின்னாடியும் சரி எப்பவும் போல வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு இருப்பது உடம்பிற்கு நல்லது. குழந்தைக்குப் பால் கொடுக்காவிட்டாலும் தாய்க்கு எடை கூடும்!

பொதுவாக எடையைக் குறைப்பதற்கு என்ன வழி? திடீரென்று ஒரே நாளில் உடலைக் குறைப்பதற்கு முயற்சி செய்யக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதை வழிக்குக் கொண்டுவர வேண்டும். உணவுக் கட்டுப்பாடு மிக முக்கியம்.

பழம், காய்கறி எல்லாம் அதிகமாய்ச் சேர்க்கலாம். கிழங்கு வகைகளைக் குறைக்கலாம். முக்கியமாக உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு கொழுப்புச் சத்து – மாச்சத்து குறைக்க வேண்டும். அரிசி, வாழைப்பழம், கிழங்கு வகை, வெண்ணெய், கேக், முந்திரிப்பருப்பு, கிரீம் இவை குறைக்க வேண்டிய வகைகள். இரண்டு வேளையோ மூன்று வேளையோ சாப்பாடு என்றால் அதனுடன் நிறுத்த வேண்டும். அதற்கு நடுவில் நொறுக்குத்தீனி சாப்பிடுவதை நிறுத்துங்கள்.

பொது இலட்சியங்களுக்காக எத்தனையோ தியாகிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கின்றார்கள். நீங்கள் உங்கள் சொந்த இலட்சியங்களுக்காகவாவது தியாகியாக முடியுமா? எனப் பாருங்களேன். வாரம் ஒருமுறை சாப்பிடாமல் இருக்கலாம். எல்லா மதமுமே ஒவ்வொரு விதத்திலே உண்ணாவிரதத்தை வலியுறுத்துகின்றது.

ஆரம்பத்தில் எடை குறையும் போது உடம்பிலுள்ள நீரின் அளவு குறைய ஆரம்பிக்கும். அதன் பிறகு தான் உடல் எடை குறைய ஆரம்பிக்கும். இச் சமயத்தில் நாம் உப்பின் அளவைக் குறைக்க வேண்டும். சாப்பிடுவதில் சில நுணுக்கம் இருக்கு. மெதுவாக சாப்பிடும் போது மூளையிலே இருக்கிற பசி உணர்வைத் தூண்டுகிற இடம் பசியைத் தூண்டாமல் மந்தப்படுத்துகின்றது. அதிகம் சாப்பிடுவதற்கு முன்னே பசி தணிந்துவிடுகின்றது. உணவை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். முதலில் புரதத்தை சாப்பிடாது மற்றவைகளைச் சாப்பிட வேண்டும். சிலர் உடல் இளைப்பதற்கு மருந்து சாப்பிடுவார்கள். அது பசியை உண்டாக்காது. அதனால் உடம்பு இளைக்கும். மருந்தை நிறுத்தியவுடன் நன்றாகப் பசிக்கும். எனவே மருந்தைவிட மனக்கட்டுப்பாடு தான் முக்கியம். உடற்பயிற்சி, நீச்சல், வேகமாக நடப்பது, யோகாசனம் இதில் எது உங்களுக்கு வசதியோ அதைச் செய்யுங்கள். உடம்பை அழுத்தி விடுவது, நீராவிக் குளியல் இவை கூட உடம்பு குறைய ஓரளவுக்கு உதவும்.

உடம்பை குறைப்பதற்காக ஒருத்தர் உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தார். தொப்பையைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என என்னைப் பார்த்துக் கேட்டார். நான் சொன்னேன்... "தினமும் காலையில் இப்படி வந்து நின்று முழங்காலை மடிக்காமல் குனிந்து உங்கள் கால் கட்டைவிரலை தொடுங்கள், சரியாய் போய் விடும்" என்றேன். அதற்கு அவர் "நான் குனிந்து கட்டை விரலைத் தொடுவதற்கு தயாராகத்தான் இருக்கின்றேன். ஆனால் என்னுடைய கால் கட்டை விரல் எங்கேயிருக்கு என்று என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. அதுதான் கஷ்டமாயிருக்கு" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2019-14.05.2019

## வாய்ப்புக்கள் வாசல் கதவைத் தட்டும்



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சியை வழங்கும் விதத்தில் கிரகங்கள் உலா வருகின்றன. குறிப்பாக குருவின் 9 ஆம் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிக்குரிய செய்திகள் வீடு வந்து சேரும். உற்றார், உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கௌரவம், அந்தஸ்து உயரும். பொருளாதார முன்னேற்றம் கருதி எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

உங்கள் இராசிநாதன் சூரியன் 9 ஆம் இடத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். அவர் மீது குருவின் பார்வை பதிகிறது. 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பதிவதால், பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு என்ன என்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவை அனைத்தும் கிடைக்கும். 'ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன்தரும்' என்பார்கள். அந்த அடிப்படையில் தொழிலில் மிச்சம் வரும் அளவிற்கு வளர்ச்சி காண்பீர்கள். அச்சம் கொடுத்து வந்த எதிரிகள் விலகுவர். கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நேரம் இது. பயணங்களால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். திரைகடல் கடந்து செல்லும் வாய்ப்பும் தீர்த்த யாத்திரை செல்லும் யோகமும் கைகூடும். வி.ஐ.பிக்கள் வீடு தேடி வந்து உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவிகள் எளிதில் கிடைக்கும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும் மாதம் இது.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமி வருகிறது. பாவ, புண்ணியங்களை எல்லாம் பதிந்து வைக்கும் கணக்காளர் சித்ரகுப்தனுக்கு உகந்த நாள் இது. அன்று மலை வலம் வந்து முருகப்பெருமானையும் சித்ரகுப்தனையும் வழிபடுங்கள்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி உச்சம் பெறும்பொழுது, உடன்பிறப்புகள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும். உங்கள் தொழிலுக்கு அவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்புக் கூடிவரும். புத-சுக்கிர யோகமும் நீச்சபங்க இராஜயோகமும் அமைவதால் சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மே 11 ஆம் திகதி மேஷத்திற்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு இராசிநாதன் சூரியனோடு இணைவது மிகுந்த யோகமான நேரமாகும். அரசு வழியில் ஆதரவுகள் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### பொன்னான புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷ இராசிக்கும் மே 12 ஆம் திகதி ரிஷபத்திற்கும் புதன் செல்கிறார். இந்தக் காலத்தில் புத-ஆதித்ய யோகம் செயற்படும். புதனோடு சூரியன் சேர்ந்திருப்பது ஒரு பொன்னான காலமாகும். கல்விக்காக, கலைக்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். பொதுச் சேவையில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவிகள் கிடைக்கலாம். தேக்க நிலை அகன்று




தெளிவு பிறக்கும். ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள். உங்கள் தொழில் வளர்ச்சிக்கு முதலீடுகள் செய்ய உறவினர்கள் முன்வருவர்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 7 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழிலில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். வாடகை இடத்தில் நடந்த தொழிலை, சொந்த இடத்திற்கு மாற்றுவீர்கள். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் அக்கறை செலுத்துவீர்கள். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் தானாக வந்து சேரும். உங்களின் திறமைக்கு தகுந்த மதிப்பும் அங்கீகாரமும் கிடைக்கும். நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுவீர்கள்.

இந்த மாதம் சித்ரா பௌர்ணமி அன்று சித்ரகுப்தன் வழிபாடும் செவ்வாய்க்கிழமை தோறும் சண்முகநாதப் பெருமான் வழிபாடும் சந்தோசத்தை வழங்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் வளர்ச்சி கூடும் மாதமாகவே உங்களுக்கு அமையப் போகிறது. பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பலத்தால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறப் போகிறது. பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்னியம் பெருகும். புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். இழந்த பதவிகள் மீண்டும் கிடைக்கலாம். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை தானாக வந்து சேரும். பிரச்சினைகள் படிப்படியாகக் குறைய, குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும் எதிர்பார்த்த இலாகா மாற்றங்களும் கிடைக்கலாம்.

இம்மாதம் பௌர்ணமி வழிபாட்டோடு, சித்ரகுப்தன் வழிபாட்டையும் மேற்கொண்டால் சிறப்பான வாழ்க்கை மலரும்.

## ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும்



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் புதன் நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம்தான். அதிலும் குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய மூன்று இடங்களிலும் பதியும் விதத்தில் கிரக நிலைகள் இருக்கின்றன.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் சனியோடு குரு சேருவதால் அதன் தாக்கம் குறையும். காரிய வெற்றிக்கு உறுதுணையாக குரு பலம் கைகொடுக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவத்தை பயன்படுத்துங்கள்.

உங்கள் இராசிக்கு 4 இல் கேதுவும் 10 இல் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். அர்த்தாஷ்டம கேதுவாக இருக்கின்றாரே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். அவரோடு குருபகவான் கூடியிருப்பதால் கூடுமான வரை சுகங்களும் சந்தோசங்களும் ஏற்பட வழிவகை செய்வார். தாயின் உடல்நலம் சீராகும். தந்தை வழி ஒத்துழைப்பு திருப்தி தரும். உறவினர் பகை அகலும்.

விரயாதிபதி சூரியன் உச்சம் பெற்று இருப்பதால் விரயங்கள் கூடுதலாகத்தான் இருக்கும். குடும்பச் சுமை கூடும். இட மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். புதிய வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்ப உறுப்பினர்களில் யாருக்கு செவ்வாய் பலம் நன்றாக இருக்கின்றதோ, அவர்கள் பெயரில் சொத்துகளை வாங்குவதுதான் நல்லது. பொதுவாக விரயங்கள் அதிகரிக்கும் மாதம் இது என்பதால், கட்டிய வீட்டைப் பழுது பார்க்க நினைத்தவர்களுக்கு அந்த வாய்ப்புக் கைகூடும்.

2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 6 இல் சஞ்சரிப்பதால் பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள் இக்காலத்தில் நடைபெறலாம். அவர்களுக்கான உத்தியோக வாய்ப்புகளை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க நினைத்தால் அந்த முயற்சி வெற்றியாகும்.


இந்த மாதம் சித்ரா பௌர்ணமி வருகிறது. அன்றைய தினம் மலை வலம் வந்து, சித்ரகுப்தன் வழிபாட்டை மேற்கொண்டால் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். தனாதிபதியாகவும் 9 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் உச்சம் பெறுவது மிகுந்த யோகமாகும். பணப் புழக்கம் அதிகரிக்கும். அருகில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாறுபட்ட கருத்துடையோர் மனம் மாறுவர். பூர்வீகச் சொத்துத் தகராறு அகலும். சொத்துப் பிரச்சினையில் [illegible] இருந்த உடன்பிறப்புகள் இப்போது ஒத்து வருவர். மே 11 ஆம் திகதி மேஷத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போவதால் வாங்கிய கடனை திருப்பிக் கொடுப்பீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் சந்தர்ப்பம் கைகூடிவரும்.

### பொன்னான புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் புதன். அவர் ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷ இராசிக்குச் செல்கிறார். அந்த நேரத்தில் மறைந்த




புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். மேஷத்தில் சஞ்சரிக்கும் சூரியனோடு புதன் இணைவதால் புத-ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தினருக்கோ, மேல் படிப்புக்காக வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி வெற்றியாகலாம். மே 12 ஆம் திகதி ரிஷபத்திற்கு புதன் செல்கிறார். எனவே பிள்ளைகளாலும் உதிரி வருமானம் வந்து சேரும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 7 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். 10 ஆம் இடத்தில் செவ்வாய் [illegible]தால் புதிய ஒப்பந்தங்கள் [illegible]. கூட்டுத் தொழில் தனித் தொழிலாக மாறும். புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களின் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ப தலைமைப் பதவிகள் வந்து சேரும். உடன்பிறப்புகள் பகை மறந்து பாசம் காட்டுவர். புதியதாக இடம் வாங்கும் யோகம் ஏற்படும். 10 இல் சஞ்சரிக்கும் செவ்வாயை குரு பார்க்க குரு-மங்கள யோகம் ஏற்படுவதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும்.

இந்த மாதம் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்யுங்கள். வியாழக்கிழமை தோறும் குருவையும் வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இந்த மாதம் தொடக்கத்தில் விரயங்கள் அதிகரிக்கும். பிற்பாதியில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி ஏற்பட்டாலும் மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். கோபத்தைக் குறைத்துக் கொண்டால் அமைதி ஏற்படும். குடும்ப ஸ்தானத்தில் சனி, குரு, கேது இருப்பதால் எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை ஆலோசித்துச் செய்வது நல்லது. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர்களின் ஆதரவு திருப்தி தரும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச்செல்வது நல்லது. குடும்பப் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்லாதீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. மாதத்தின் கடைசிப் பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

04



புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான சில காணிகள் மற்றும் கட்டடங்கள் சம்பந்தமான ஆவணச் சான்றுகள் சரிவர பேணிவரப்பட்டிருக்காமை, புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி கட்டடங்களை சரியாக இனங்கண்டு கொள்வதற்கு தவறியிருந்தமை, முறைப்படி உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்காமையால் வெளித்தரப்பினர்கள் தமது நோக்கங்களிற்காக இக்காணி கட்டடங்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தமை, குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான குத்தகை உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்காமை மற்றும் அவற்றில் சில சட்டரீதியற்ற முறையில் உபகுத்தகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை போன்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

மேலும், சில காணி கட்டடங்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நீண்ட காலமாக தீர்வு காணப்படாதுள்ளதுடன் இன்னும் சில சட்டத்திற்கு முரணாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால் புகையிரதத் திணைக்களத்திற்கு அவற்றின் மீதுள்ள உரிமைக்கு பாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

காணி கட்டடங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்கையில் முறைப்படியாக குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை, காணி கட்டடங்களை அனுமதியின்றி பாவனைக்குட்படுத்துவதனை ஆரம்பத்தில் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை, புகையிரதத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளிற்கிடையே

> புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை பயனுள்ள வகையில் ஈடுபடுத்தி அதன் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமென கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் புகையிரதத் திணைக்களத்திற்கான 2010 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒருங்கிணைப்புக் காணப்படாமை அத்துடன் சில பிரிவுகளில் போதியளவில் வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்காமை, கண்காணிப்பு போதியளவில் இருக்காமை, காணிகள் பிரிவில் பௌதீக வளங்களின் பற்றாக்குறை, குத்தகை வாடகைகளை அறவிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமை போன்ற காரணங்களால் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான இவ்வாதனங்கள் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படாதிருந்தன.

பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத அல்லது குறைப்பயன்பாடுடைய காணிகள் மற்றும் தற்போது முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினரால் பாவனைக்குட்படுத்தப்பட்டுள்ள காணி கட்டடங்களை பயனுள்ள வகையில் ஈடுபடுத்துவதற்கு பரிகாரத்தை மேற்கொள்வது திணைக்களத்திற்கு சிரமமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது எனக் கூறப்பட்டிருந்தது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், "இது தொடர்பில் புகையிரதத் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அச்சிக்கல்களிற்கு தீர்வுகளாக முன்வைக்கப்படும் சிபார்சுகள் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. புகையிரதத் திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைக்கு புறம்பாக பயணிகளின் பொதுமக்கள் நலனை முன்னேற்றும் வகையில் இவ்வாதனங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வர்த்தக நோக்கில் பாரியளவு வருமானத்தை ஈட்டக்கூடியதாக இப்பகுதியில் காணப்படும் காணி கட்டடங்களை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், இவ்வாதனங்களை காலத்திற்கேற்ப விலைமதித்து முறைப்படியாக அவற்றைக் குத்தகைக்கு வழங்குதல், தற்போது பாவனைக்கு எடுக்கப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிலுள்ள ஆதனங்களை பயனுள்ள விதத்தில் பாவனைக்கு உட்படுத்தும் நோக்கில் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல், நீதிமன்றத்திலுள்ள காணிப்பிரச்சினைகளை விரைவாக தீர்த்துக்கொள்வத ற்கு சட்டமா அதிபரினூடாக நடவடிக்கை எடுத்தல், இவ்விடயம் தொடர்பாக கடமையாற்றும் திணைக்களத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளிற்கிடையே ஒருங்கிணைப்பை அதிகரித்தல் மற்றும் தேவையான வளங்களை போதியளவில் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் இச் சிபார்சுகளில் முக்கியமானவையாகும்." இவ்வாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

**11.துறைமுக அதிகார சபையிடமுள்ள அரச காணிகள்**

1918 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு துறைமுக ஆணைக்குழு என்னும் அரசாங்க திணைக்களத்தால் கொழும்பு துறைமுகம் நிர்வகிக்கப்பட்டது. இவ் ஆணைக்குழு சரக்கு கையாளல் - உபகரணங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு, வழிகாட்டல் (pilotage) சேவைகள், நறுக்குதல் மற்றும் நழுவுதல் ஆகியவற்றிற்கான விநியோகத்திற்கும் பொறுப்பிற்கும் பொறுப்பு வகித்தது. அரசாங்கம் அதன் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நிதியளித்தது. Stevedoring மற்றும் கடற்கரை கையாளுதல் போன்ற நடவடிக்கைகள் பல தனியார் கப்பல் துறைசார் நிறுவனங்கள் கைகளில் இருந்தன. 1958 ஆம் ஆண்டு, துறைமுக சரக்கு கூட்டுத்தாபனம் (Port Cargo Corporation) நிறுவப்பட்டு சகல தொழிற்பாடுகளும் அதனிடம் கையளிக்கப்பட்டன. 1967 இல், கப்பலில் கொடுக்கல் -வாங்கல் செய்வதற்கும் அதன் பாதுகாப் புக்குமாக துறைமுக கொடுக்கல்-வாங்கல் மற்றும் பாதுகாப்புச் சேவைகள் கூட்டுத் தாபனம் (The Port Tally and Protective Services Corporation) ஆரம்பிக்கப்பட்டது.

1979 ஒகஸ்ட் 1இல் இலங்கை துறைமுக அதிகாரசபை 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. (இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 7 மற்றும் 35 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலமும், 1990 இன் 36 ஆம் இலக்க சட்டத்தின் மூலமும், 1992 இன் 2 ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டது). இலங்கை துறைமுக அதிகார சபை அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்கீடுகளை பெறுவதில்லை. அதன் சொந்த வளங்கள் மற்றும் வருவாயில் செயற்படுகிறது.

**துறைமுக அதிகாரசபைக்கு அரச காணியை கையுதிர்த்தல் செய்வதற்குரிய அமைச்சரின் அதிகாரம்**

> துறைமுக அதிகாரசபைக்கு பொறுப்பான அமைச்சர் அவ்வதிகார சபையின் செயற்பாடுகளின் நோக்கங்களுக்காக அரச காணி தேவைப்படுமிடத்து காணி அமைச்சின் ஒப்புதலுடனும் அக் காணிக்கான கையுதிர்த்தல் கட்டளையை (Vesting Order) வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட முடியும்.

துறைமுக அதிகாரசபை சட்டத்தின் (1979இல் இல.51) பிரிவு 24இன்படி, துறைமுக அதிகாரசபைக்கு பொறுப்பான அமைச்சர் அவ்வதிகார சபையின் செயற்பாடுகளின் நோக்கங்களுக்காக அரச காணி தேவைப்படுமிடத்து காணி அமைச்சின் ஒப்புதலுடனும் அக் காணிக்கான கையுதிர்த்தல் கட்டளையை (Vesting Order) வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட வேண்டும்.

எவ்வாறான கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகளுக்கு உட்பட்ட அல்லது ஆணைக்குட்பட்ட எத் திகதியிலிருந்து கையுதிர்த்தல் கட்டளை வழங்கப்படுகின்றது என்பது அதில் குறிப்பிடப்படல் வேண்டும்.

கையுதிர்த்தல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அத்தகைய கட்டுப்பாட்டு மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படும் கையுதிர்த்தல் கட்டளை (Vesting Order), துறைமுக அதிகார சபைக்கு அக்காணியின் முழுமையான உரித்தைக் கொடுக்கும்.

சட்டத்தின் பிரிவு 26 இன் கூற்றுப்படி, 24 மற்றும் 25 ஆம் பிரிவின் கீழ் துறைமுக அதிகாரசபைக்கு எந்தவொரு காணியும் ஒப்படைக்கப்பட்டிருந்தால், அத்தகைய காணியில் அங்கீகரிக்காத உடைமை அல்லது ஆக்கிரமிப்பில் உள்ள எந்தவொரு நபருக்கும் கூறப்பட்ட நேரத்திற்குள் நிலத்தை விட்டுவெளியேற துறைமுக அதிகார சபை அதிகாரி எழுத்து மூலமாகக் உத்தரவிடலாம். அத்துமீறி இருப்பவர் நிலத்தை விட்டு வெளியேற மறுத்தால் நீதிமன்றம் மூலமாக அவரை நிலத்தை விட்டு வெளியேற்ற எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை பிரிவு 24 தெளிவாகக் கூறுகின்றது.

**12.1981ஆம் ஆண்டு 57ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்புச் சட்டம்**

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

கடலரிப்புடன் போராடுவதென்பது பல நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த ஒரு விடயமாகும் என்பதுடன், கரையோரப் பாதுகாப்புப் பணியாளர்கள் 1963 இற்கு முன்பதாகவே பல்வேறுபட்ட திணைக்க ளங்களால் கையாளப்பட்டிருக்கிறார்கள். கரையோரக் கடலரிப்புக் கட்டுப்பாட்டுக்கு ஒரு அனைத்து மடங்கிய அணுகுமுறை தேவையென்று அரசாங்கம் உணர்ந்து கொண்டமையானது 1963இல் கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவில் ஒரு கரையோரப் பாதுகாப்புப் பொறியியல் பிரிவை அமைப்பதற்கு இட்டுச்சென்றது. 1978இல் இக் கரையோரப் பாதுகாப்புப் பொறியியில் பிரிவானது மீன்பிடி மற்றும் கடல் நீரியல் வளங்கள் அமைச்சுக்கு மாற்றப்பட்டதுடன் அது கரையோரப் பாதுகாப்புப் பிரிவாகத் தொழிற்பட்டது.

1981ஆம் ஆண்டு 57ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்புச் சட்டமானது 1981இல் பாராளுமன்றத்தில் சட்டமாகக்கப்பட்டது. "இது கரையோர வலயத்தின் ஆய்வுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதுடன், கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தினைத் தயாரித்ததுடன் கரையோர வலயத்திற்குள்ளே அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், கரையோர வலயத்தினுள் கரையோரப் பாதுகாப்பான வேலைகளை உருவாக்குதல் மற்றும் நிறைவேற்றுதலுக்கான ஏற்பாடுகளைச் செய்ததுடன், எழுதப்பட்ட சில சட்டங்கள் தொடர்பான தொடரிடையான திருத்தங்களையும் செய்ததுடன் அதுதொடர்பான இன்னும் பல விடயங்களையும் இச்சட்டமானது வழங்கியது".

இதன் பிரகாரம் கரையோரப் பாதுகாப்புப் பிரிவானது கரையோரப் பாதுகாப்புத் திணைக்களமாக (CCD) 1984இல் தரமுயர்த்தப்பட்டதுடன், 1988ஆம் ஆண்டு 64ஆம் இலக்கக் கரையோரப் பாதுகாப்புத் திருத்தச் சட்டமூலமானது 1988இல் நிறைவேற்றப்பட்டதுடன், கரையோர வலயத்தின் நிர்வாகம், கட்டுப்பாடு கவனம், முகாமைத்துவம் என்பனவற்றின் அதிகாரம் அதன் பணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டது. இத் திணைக்களமானது 2009 ஜூலையில் மேலும் தரமுயர்த்தப்பட்டு கரையோரப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டார். கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தின் இறுதி மறுசீரமைப்பானது 2004இல் மேற்கொள்ளப்பட்டதுடன், அதுவே தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2011 இன் இல. 49 சட்டத்தின் படி திருத்தப்பட்டு தற்போது இச் சட்டம் கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ சட்டம் என அழைக்கப்படுகிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

224

பொ.குமாரசுவாமியின் பதவிக் காலத்தில் வடக்கிற்குப் புகையிரதப் பாதையை விஸ்தரிப்பது சம்பந்தமானதும் யாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் பொது வைத்தியசாலைகளை அமைப்பது பற்றியதுமான மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். இந்து ஒகன் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறமைந்தது.

குமாரசுவாமியின் வருகையால் யாழ்ப்பாணம் பெருமளவு நன்மை பெறும் என்பதில் எமக்குச் சந்தேகமேயில்லை. ஏனெனில் அவர் தனது தொகுதி மக்களின் குறைகளையும் தேவைகளையும் முழுமையாக அறிந்தவராய் அவர் கொழும்பு திரும்புகிறார்.

இதே ஆசிரியர் தலையங்கம் குமாரசுவாமிக்கு யாழ்ப்பா ணம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் அளிக்கப்பட்ட வரவேற்பையும் தெரிவிக்கின்றது. தமிழரின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு பாலமாகச் செயற்பட்டு சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்தனர் என்பதை நாம் மீண்டும் காணக்கூடியதாக உள்ளது.

இப்போது தமிழர் அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டுமானத்துடன் நன்கு பரிச்சயமாகிவிட்டிருந்தனர். இப் பரிச்சயம் அவர்களை அரசியல் நடைமுறையில் முனைப்புடன் பங்கெடுக்கச் செய்து அதன் பெறுபேறாக அண்மித்த எதிர்காலத்தில் தமது அரசியல் உரிமைகளுக்குப் போராடுவதற்கான தன்னம்பிக்கையை அவர்கள் பெறக்கூடியதாக இருந்தது.

குமாரசுவாமி தனது ஐந்து வருடப் பதவிக் காலத்தை 1897 இல் பூர்த்தி செய்யும் போது யாழ்ப்பாணத்து மக்கள் சாதி, சமய வித்தியாசமின்றி அவரை மீண்டும் சபைக்கு நியமிக்குமாறு அபரிமிதமான ஆதரவைக் காட்டி அரசாங்கத்தை வற்புறுத்தினர்.

இந்த மாவட்டத்தின் தமிழர் என நாம் சொல்கின்றோம். ஏனெனில் முறையாகக் கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தில் தமிழ்ச் சமூகத்தினது அத்தனை பகுதியினருமே கலந்து தத்தம் பல்வேறுபட்ட நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.



பொ.குமாரசுவாமி

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

தமிழ்ச் சமூகம், சாதிய மற்றும் ஏனைய சமூகத் தடைகளைத் தாண்டி ஒருமித்தது என்பதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இதைப்போன்றதொரு கூட்டம் முல்லைத்தீவு பொது வேலைத் திணைக்கள விடுதியில் 1897 நவம்பர் 20 ஆம் திகதியன்று கூட்டப்பட்டபோது பல அரசாங்க அதிகாரிகளும் முன்னணி விவசாயிகளும் அங்குகூடி குமாரசுவாமிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இதைப்போன்ற ஏனைய கூட்டங்களையிட்டு இந்து ஒகன் செய்தி வெளியிட்டிருந்தது. அவற்றின்படி திருகோணமலை சைவப்பாடசாலையில் அதிகாரிகள், முதலியார்கள், வன்னியர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் ஆகியோருடன் வேறு பலரும் ஒன்றுகூடி குமாரசுவாமியை ஆதரிக்கத் தீர்மானித்தனர்.

இன்னுமோர் கூட்டம் 1897 டிசெம்பர் முதலாம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற இல்லத்தில் கூட்டப்பட்டு அங்கு எல்லா மட்டத்தைச் சேர்ந்த மக்களும் பங்குபற்றி குமாரசுவாமி மீள் நியமனம் செய்யப்படுவதற்கு தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தனர்.

குமாரசுவாமிக்குக் கிடைத்த இந்த அபரிமிதமான ஆதரவு தமிழ்ச் சமூகம் தனது பிரதேச வேறுபாடுகளினாலோ மற்றும் சாதி, சமய வித்தியாசங்களினாலோ பேதப்படாமல் ஒரே பதாகையின் கீழ் இணைந்தமையைக் காட்டுகின்றது.

எல்லோரும் ஒன்றுபட்ட இந்தச் சூழல் ஒரு தனிச் சமூகத்தின் நலன்களுக்கான அவர்களுடைய ஒற்றுமையை உறுதிப்படுத்தி அவர்கள் தமது அரசியல் சுதந்திரத்தை வெல்வதற்கான தமது அரசியல் உரிமைகளை நிலை நிறுத்த வழிவகுத்தது.

பொ.குமாரசுவாமியை சட்டசபைக்குத் தெரிவதற்கான தமிழரின் ஒற்றுமை ஒருவேளை குடியேற்ற அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கையாகக் காணப்பட்டிருக்கக்கூடும். எவ்வாறிருந்தபோதும் தேசாதிபதி தமிழரின் விருப்பை வெறுமனே புறந்தள்ளி கொழும்பைத் தளமாகக் கொண்டிருந்த. கிறிஸ்தவத் தமிழரான டாக்டர் றொக்வூட்டை நியமித்தார்.

பொதுவைத்தியராக இருந்த இவர் தமிழ்ச் சமூகத்தினால் அதிகம் அறியப்படாதவராய் ஆனால் குடியேற்ற அதிகார வர்க்கத்தின் மத்தியில் செல்வாக்கு மிக்கவராய் இருந்தார். அரசாங்கத்தால் வேண்டு மென்றே மேற்கொள்ளப்பட்ட இச்செய்கை தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் குழப்பம், கோபம், விரக்தி என்பனவற்றை ஏற்படுத்தியது.

தமிழர் பல்வேறு கூட்டங்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் ஒழுங்கு செய்து குமாரசுவாமிக்கு ஆதரவாகத் தமது குரலை எழுப்பியபோதும் தேசாதிபதி டாக்டர் றொக்வூட்டின் நியமனத்தைத் தொடரவே செய்து தேசாதிபதிக்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு எதிராகவும் அரசியல் ஆட்சேபனை உருவாகக் காரணமாயிருந்தார். தமிழரின் கவலையை இந்து ஒகன் ஆசிரியர் தலையங்கம் ஒன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது.

தேசாதிபதி இவ்வாறு சுயமாக, தனது சொந்த விருப்பத்தில் இந்த நியமனத்தைச் செய்ததற்குக் காரணம் அவருக்கு அரசியலமைப்பின்படி அதற்கான உரிமை உள்ளதனாலேயாகும். இந்த உரிமை தேசாதிபதிக்கே தொடர்ந்தும் இருக்குமானால் சட்ட நிருபண சபையில் தமிழ்மக்களின் விருப்பங்கள் எவ்வாறு பூர்த்தியாகும்? இந்த உரிமை இப்போது எமக்குக் கிடைக்காவிடின் பின் எப்போது அது எமக்குக் கிடைக்கப் போகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் 40 வருடங்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

(சாவகச்சேரி)

1981 ஆம் ஆண்டு தென்மராட்சியில் காணப்பட்ட மக்கள் தொகை தான் இன்றும் தென்மராட்சியில் காணப்படுகிறது. 40 வருடத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை என வாழ்நாள் பேராசிரியரும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமாகிய பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற தென்மராட்சியின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், எமது உள்ளூர் வளங்களைப் பெருக்க வேண்டும். கட்டாந்தரையாகக் காணப்பட்ட தென்மராட்சி-அறுகுவெளிப் பகுதியில் இன்று பாரிய முதலீட்டில் உப்பளம் அமைக்கப்பட்டு தொழில் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து வரும் செல்வமும், உள்ளூர் செல்வமும் ஒருங்கிணையும் போது நுகர்வு சக்தி அதிகரித்து தொழில் வாய்ப்பு அதிகரிக்கப்படும்.

நாம் பௌதீக மற்றும் மனித வளத்தினை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். இன்று வரை மனித, பௌதீக வளத்தினை உச்ச அளவில் பயன்படுத்தவில்லை. நெற் செய்கையை ஒரு போகம் தான் மேற்கொள்கிறோம். மீதி 9 மாத காலம் வயல் நிலங்கள் எந்தவித பயன்பாடும் இன்றிக் காணப்படுகின்றன. அதற்கு மாற்றுத் திட்டத்தைப் பயன்படுத்தி வயல் நிலங்களைப் பயன்படுத்த வேண்டும். எம்மிடமுள்ள மனித வளமும் சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லை. எமது மனித வளத்தில் அதிக சனத்தொகை கொண்ட பிரிவாக வயோதிபப் பிரிவு காணப்படுகிறது. இளைஞர்களின் தொகை வெகுவாகக் குறைந்து வருகிறது. யாழில் ஐந்தில் ஒருவர் அறுபது வயதினை எட்டியவர்களாக உள்ளார். நாம் 60-75 வயதினை உடையவர்களை இளைய முதியவர்களாகக் கருதி அவர்களையும் பிரியோசனமுடையவர்களாகப் பயன்படுத்த வேண்டும். பாடசாலைகளில் மாணவர் தொகை குறைவடைந்து வருகிறது. யாழ்.குடாநாடு முழுவதும் இதேநிலை தான் காணப்படுகிறது. தென்மராட்சிப் பகுதியில் வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் மின்மானி வாசிக்கின்றனர். எமது பிரதேச வேலைவாய்ப்பு எமது பிரதேச மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். அரசியல் தலைமைகள் 21ஆம் நூற்றாண்டில் மனித வளத்தை கட்டிப் பாதுகாக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

# கோத்தபாயவிற்கு எதிரான வழக்கு விபரம் அமெரிக்க சமஷ்டி நீதிபதியால் பகிரங்கம்

## ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு தகவல்

(வோஷிங்டன்)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்குகள் தொடர்பில் கலிபோர்னியாவின் மத்திய மாவட்ட அமெரிக்க சமஷ்டி நீதிபதி பகிரங்கப்படுத்தியுள்ளதாக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.



2009 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை விவகாரத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வகிபாகம் தொடர்பில் விசாரிக்குமாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு கடந்த 4 ஆம் திகதி ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

லசந்த விக்கிரமதுங்க கொலை விவகாரம் குறித்து இலங்கை அரசு பல வருடகாலமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் வழக்கில் எவ்வித முன்னேற்றங்களும் இல்லை என்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முக்கிய கொலையாளி பற்றிய சாட்சிகள் கிடைக்கப்பெற்ற போதிலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்விசாரணையில் நீதி நிலைநாட்டப்படவில்லை என்று அந்த அமைப்பின் ஆசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன் பட்லெட் தெரிவித்தார்.

அத்தோடு அமெரிக்க நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணையானது லசந்த விக்கிரமதுங்க கொலை விவகாரம் குறித்து மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அதிகாரிகளுக்குத் தூண்டுதலாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய காலப்பகுதியில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அவர் செயற்பட்டதாக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கைக்கு மீண்டும் எஸ்பெஸ்டஸ் தகடுகள்

இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்புக்குப் பொருத்தமான எஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகில் அதிகமாகக் கூரைத் தகடுகளை உற்பத்தி செய்யும் நாடு என்ற வகையில், இலங்கைக்கான குறித்த கூரைத் தகடுகளை ரஷ்யாவே அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த கூரைத் தகடுகள் குறித்து விளக்கமளிக்கும் நிகழ்வொன்று கடந்த வாரம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவால் கொழும்பில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ரஷ்யாவின் பிரதி சுகாதார அமைச்சர், இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவராலய அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1697

### சூரியகாந்த்

சூரியன் கிட்ட இரக்கம் காட்டச் சொன்னா அது இறங்கி வந்து காட்டுது...



### பத்மா

நல்ல கலைஞனுக்கு ஜாதி, மதம் இல்லை.. ஜாதி, மதம் பார்த்தால் அவன் மனிதன் இல்லை



### சர்வானந்த்

மரங்களை வெட்டியதால் போக்குவரத்து குறியீட்டுத் தூணில் குடியேறிய பறவை... நாளை நம் நிலைமை என்னவென்று யோசியுங்கள்




### ஆனந்த்

விவசாயி ஏழை என்றால்... அவர் விளைவித்ததை வாங்கி உண்ணும் நீங்கள் எப்படி பணக்காரராக இருக்க முடியும்



### புவி

உரிமை இல்லாத உறவும் உண்மை இல்லாத அன்பும் நேர்மை இல்லாத நட்பும் நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும் என்றும் நிரந்தரமில்லை



### சாரு

தான் மட்டும் நல்லா இருக்கனும்னு நினைக்கிறவங்க தன் வாழ்க்கை முழுவதும் நல்லவங்களா நடிச்சிக்கிட்டே இருப்பாங்க



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித்தேர்தலை காலந்தாழ்த்தும் எந்தத் தேவையும் எமக்குக் கிடையாது

## துமிந்த திஸாநாயக்க திட்டவட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை காலந்தாழ்த்தவும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைய வேண்டிய அவசியமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடையாது.

ஜனாதிபதியுடைய நிதி ஒதுக்கீட்டைக் கருத்திற் கொண்டு இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் நாம் கலந்து கொள்ளாமல் இருந்தமைக்காகவே இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன என்று பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடும் காணப்பட்டமையால் தான் சுதந்திரக் கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அதனைக் காரணம் காட்டி ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்துவதற்காக நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப் போவதாக சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர். அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்த வேண்டிய எந்தத் தேவையும் எமக்கு கிடையாது.

அதே போன்று ஐக்கிய தேசியக் கட்சியுடனும் நாம் இணையப் போவதில்லை.

இவ்வாறு முன்வைக்கப்படும் போலியான விமர்சனங்களுக்கு நாம் பதிலளிக்கத் தேவையில்லை. அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை தோல்வியடையச் செய்ய முடியவில்லை என்பதற்காக பொது ஜன பெரமுன எம் மீது குற்றம் சாட்ட முற்படுகின்றது.

நாம் வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தாலும் அதனை தோல்வியடையச் செய்யக் கூடிய பெரும்பான்மையை பெற்றிருக்க முடியாது. எனவே இவ்வாறான விடயங்களை மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருப்பது காலத்தை வீணடிக்கும் செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிரிழந்த நிலையில் சிறுத்தை



(பத்தனை)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்டோனிகிளிப் தோட்ட மேற்பிரிவில் நேற்றுக் காலை 8மணியளவில் சிறுத்தை ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் 24 ஆம் இலக்க தேயிலை மலையில் இந்தச் சிறுத்தை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ள, அதே வேளை மேலும் பல சிறுத்தைகளின் நடமாட்டம் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. (இ-7)

# பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்களுக்கு பதவியுயர்வு

பனை அபிவிருத்திச் சபையில் நீண்ட காலமாக பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு தேர்வு, நேர்முகத் தேர்வு என்பன நடைபெற்றிருந்தும் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு தரமுயர்வு வழங்கப்படாமல் இருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு பணியாளர்களின் குறை தீர்க்க பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ஆ.ந.இராசேந்திரன் தலைமைப் பதவியேற்று இரண்டு மாத காலத்தினுள் தரமுயர்வு வழங்கி உள்ளார்.

ஏனைய பணியாளர்களுக்கும் தரமுயர்வுக்கான உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (5-9)

## ஊடகவியலாளர் லசந்த கொலை

# கோத்தாவுக்கு காலஅவகாசம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக பதிலளிக்க முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி அவருக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை குறித்து கோத்தபாயவிடம் இழப்பீடு கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதை நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நிலையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி கலிபோர்னியா மாநிலத்தில் லொஸ் ஏஞ்சலிஸ் மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடரப்பட்டதாகவும், குற்றம் சுமத்தப்பட்டவரிடம் அதனை உரிய முறையில் அறிவித்துள்ளதாகவும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இரண்டு சமஷ்டி சட்டங்கள் இருக்கின்றன என்றும் வெளிநாட்டில் சேதத்தை ஏற்படுத்திய குற்றம் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளானவர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளதென்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வழக்கில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ அல்லது வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு மனுவொன்றைத் தாக்கல் செய்யவோ பிரதிவாதி தரப்புக்குச் சந்தர்ப்பம் இருக்கின்றதென்றும் அவர் பதிலளிக்கவில்லை என்றால், பிரதிவாதியின்றியே வழக்கை விசாரிக்க முடியுமென்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குற்றவியல் வழக்குப் போன்று இந்த வழக்கில் எவருக்கும் சிறைத்தண்டனை வழங்கப்படாது எனத் தெரிவித்துள்ள நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நிலையம், எனினும் நிதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# நாமலின் ஏப்ரல் மாதச் சம்பளம் புற்றுநோய் வைத்தியசாலைக்கு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது ஏப்ரல் மாதச் சம்பளத்தை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புற்றுநோய் நம்பிக்கைத் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் குறித்த வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறு தனது சம்பளத்தை நாமல் வழங்கியுள்ளார்.



இந்த விடயம் குறித்து நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மதுபோதையில் சென்ற 1271 பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் இரத்து

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் மது போதையில் வாகனத்தை செலுத்திய 1271 பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, போக்குவரத்து மற்றும் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் வீதி ஒழுங்குகளை மீறிய சாரதிகள் தொடர்பிலும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் மக்கள் கருத்தறிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் வட்டார ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள், திட்ட வரைபுகள், தேவைப்பாடுகள், குறித்து, வட்டார ரீதியாக மக்களின் கருத்துக்களைக் கேட்கும் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

இன்று 18ஆம் திகதி 2 ஆம் வட்டார (ஜே/118, ஜே/119) மக்கள் கலந்துரையாடல் மற்றும் 20 ஆம் திகதி 3 ஆம் வட்டார (ஜே/116, ஜே/120) மக்கள் கலந்துரையாடல் ஆகியவை கோண்டாவில் ஆசிமட அரசடி பிள்ளையார் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் 20 ஆம் திகதி 4 ஆம் வட்டார (ஜே/124 , ஜே/128) கலந்துரையாடல் கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாசாலையில் காலை 9 மணிக்கும் 21 ஆம் திகதி 6 ஆம் வட்டார (ஜே/121, ஜே/123) கலந்துரையாடல் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் காலை 09 மணிக்கும், தொடர்ந்து 8 ஆம் வட்டார (ஜே/114) கலந்துரையாடல் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் முற்பகல் 10.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கு 7 ஆம் வட்டார (ஜே/122, ஜே/126) கலந்துரையாடல் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி விவேகானந்தா சனசமூக நிலையத்தில் (மஞ்சத்தடி) முதலாம் வட்டார (ஜே/115, ஜே/117) மக்களுக்கான கலந்துரையாடலும் , கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் 10 ஆம் வட்டாரத்திற்கான (ஜே/112, ஜே/113) கலந்துரையாடலும், அரியாலை நாவலடி சிகிச்சை நிலையத்தில் 12 ஆம் வட்டாரத்திற்கான (ஜே/89, ஜே/90) கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன. அதேவேளை அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி பரமேஸ்வர கல்லூரியில் 9 ஆம் வட்டார (ஜே/110, ஜே/111) கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி கொக்குவில் பிடாரி அம்மன் ஆலய மண்டபத்தில் 5 ஆம் வட்டார (ஜே/99, ஜே/125, ஜே/127) கலந்துரையாடலும் , அரியாலை முள்ளி யூதா கோவிலில் 11 ஆம் வட்டாரத்திற்கு (ஜே/94 , ஜே/96) கலந்துரையாடலும் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது என சபையின் தவிசாளர் த. தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார். (இ-272)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் மந்திராலோசனை நடத்திய மகிந்த தரப்பின் முக்கியஸ்தர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அரசியல்வாதி ஒருவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடந்துள்ளதாக தெரியவருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தை சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றுள்ளது.

குறித்த அரசியல்வாதி ஏற்கனவே பசில் ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் நடத்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த அரசியல்வாதி இந்தியாவின் திருப்பதிக்குச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாகரம்ய்யா!



ராசு மாமாவுக்கு 98 வயது. தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை கிராமப் புறத்திலேயே கழித்தவர். அவர் வசித்த கிராமம் நகர எல்லைகளை விட்டு வெகு தொலைவு விலகியிருந்தது. நவீன கால நாகரிக வாடை அந்தக் கிராமத்துக்கு இன்னும் எட்டவில்லை. ரயில் - பஸ் போன்றவற்றை இந்தக் கிராம மக்களில் பெரும்பான்மையினர் பார்த்ததே இல்லை.

ராசு மாமாவின் பேரப்பிள்ளைகள் பெரிய உத்தியோகம் பார்த்துக் கொண்டு பட்டணத்தில் இருந்தனர். அவர்களுடைய அழைப்பின் பேரில் நகரத்துக்கு வந்திருந்தார்.

ஒரு மனிதனால் 98 வயது வரை வாழ முடியும் என்ற விடயமே நகர்ப்புற மக்களுக்கு ஒரு அதிசயம். நவீன நகரங்களில் 60 வயதுக்கு மேல் வாழ்வோர் அரிது. அநேகமாக 50 வயது நடப்பதற்குள்ளே மக்கள் மரணமடைந்து விடுவது வழக்கம்.

நகரத்துக்கு 98 வயது மனிதர் ஒருவர் வந்திருக்கிறார் என்ற செய்தியை ஏதோ ஒரு அற்புதம் போலக் கருதிய நகர மக்கள் மாமாவை வேடிக்கை பார்க்கவும் அவருடன் உரையாடவும் அடிக்கடி வரத் தொடங்கினர். பத்திரிகை நிருபர் ஒருவர் ராசு மாமாவைப் பேட்டி காண வந்தார். நிருபர் தாம் வந்ததன் நோக்கத்தை விபரிக்கக் கேட்டதும் மாமா ஆச்சர்யம் அடைந்தார்.

“என்னைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வதனால் உங்கள் வாசகர்களுக்கு என்ன இலாபம்?” என்று கேட்டார் மாமா.

“எங்கள் நகரப் பகுதியில் ஒரு மனிதர் 98 வயது வரை வாழ்வது என்பது பெரிய அதிசயம்!” என்றார் நிருபர்.

மாமா கலகலவென்று நகைத்தார்.

“ஒரு மனிதன் அதிக நாள் வாழ்வது அவ்வளவு அதிசயமா? எங்கள் கிராமத்தில் நூறு வயதுக்கு மேல் வாழும் மக்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனரே!” என்றார்.

“அது எங்களுக்கெல்லாம் அதிசயத்திலும் அதிசயமாகும். எங்கள் நகர்ப்புறங்களில் 50 வயது வரையில் வாழ்வதே பெரிய விடயம்!” என்று கூறினார் நிருபர்.

பிறகு பேட்டியைத் தொடங்கினார்.

“மாமா அவர்களே! எங்கள் நகர்ப்புற வாழ்க்கையை எந்த அளவுக்கு ரசிக்கிறீர்கள்? இங்கே உங்கள் 'மனம் கவர்ந்த அம்சம் என்னென்ன?”

“ஐயா இதுபோன்ற தூசியும் தும்பும் நிறைந்த ஒரு நகரத்தில் ஒரு மனிதனால் எப்படித்தான் வாழ முடியுமோ தெரியவில்லை. எனக்கு என்னவோ மூச்சுவிடவே கஷ்டமாக இருப்பது மாதிரி இருக்கிறது. நான் 120 வயது வரையிலாவது உயிர் வாழ முடியும் என்று கிராமத்திலிருக்கும் போது நம்பிக்கை இருந்தது.

“இங்கே வந்த பிறகு ஓர் ஆறு மாதம் உயிரோடு இருக்க முடியுமா என்றே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. மக்களுடைய நடைஉடை பாவனை போன்ற எல்லாவற்றிலும் முட்டாள்தனத்தைத் தான் காண முடிகிறது.

“பத்து வயது சிறுவனிலிருந்து 50 வயது மனிதர் வரை எவ்வளவு இறுக்கமான லினன் உள்ளாடை அணிகின்றனர். காற்றோட்டமாகவும் ஆரோக்கியமாகவும் தளதளவென முழுஆடை அணிந்தவர் ஒருவரைக் கூடக் காண முடியவில்லையே... வெட்கக்கேடு!” என்றார் மாமா.

“உங்கள் கிராமத்தில் காண முடியாத ரயில் - பஸ்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள். இவை மிகவும் வசதிகரமான, சுகமான போக்குவரத்து சாதனங்கள் அல்லவா?” என்று நிருபர் கேட்டார்.

“அவையென்ன போக்குவரத்துச் சாதனங்களா? ஆடு மாடுகளை அடைக்கும் கொட்டகையா? கொஞ்சமாவது அமைதியாக, நிம்மதியாக பயணம் செய்ய முடிகிறதா? ஆயிரம் தான் சொல்லுங்கள்... கிராமத்தில் கழுதையின் மீது பயணம் செய்யும் சுகம் வருமா?” என்றார் மாமா.

“அது கிடக்கட்டும். எங்கள் நகரத்து சினிமா, நாடகம் போன்ற பொழுதுபோக்கு நிலையங்கள் கூட உங்கள் மனத்தைக் கவரவில்லையா?” என்று கேட்டார் நிருபர்.

“அவையெல்லாம் மனிதர்களைப் பைத்தியக்காரர்களாக்கிவிடும்!” என்றார் மாமா.

“எங்கள் நகரத்து உணவு வகைகள் கூட உங்களுக்கு ருசிக்கவில்லையா?” என நிருபர் வினவினார்.

“சாக்கடை நாற்றமெடுக்கும் சூழ்நிலையில் ஊசிப்போன, தீய்ந்துபோன பதார்த்தங்களை முள்கரண்டிகளால் அள்ளிச் சாப்பிட்டுவிட்டால் போதுமா? எங்கள் கிராமத்தின் ஆரோக்கியமான பழைய அமுதுக்கு இது ஈடாகுமா?” என்று கேட்டார் மாமா.

“எங்கள் நகர நவீன சாதனமான எரிவாயு, மின்சாரம் இவையெல்லாம் கூட உங்கள் மனத்தைக் கவரவில்லையா?” என்று நிருபர் கேள்வி எழுப்பினார்.

“தம்பி...” என்று நிருபரை உரிமையோடு விளித்தார் மாமா.

“வாழ்க்கையின் சிறப்புக்களைப் பற்றி உங்களுக்கு எல்லாம் என்ன தெரியும்? எங்கள் கிராமத்தில் நான் சொக்கப்பானை கொளுத்தினால் எவ்வளவு குஷியாக இருக்கும் தெரியுமா? நாங்கள் வெறும் கணப்புக்கு என்று மட்டும் தயார் செய்வதில்லை. ஏதாவது காரணத்துக்குத் தீமூட்டினால் அது எல்லாவித வேலைகளுக்கும் பயன்படுவதாக இருக்கும். வெளிச்சத்துக்கு வெளிச்சம், கதகதப்புக்கு கதகதப்பு, சமையலுக்கு நெருப்பு இப்படிப் பலவிதமான பயன்கள்.

“இங்கே எங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் சிறு அடுப்பு மூட்டினால் போதும். பேரன் அனுமதி கொடுத்தால் இப்போதே அடுப்பை மூட்டி விடுவேன். அந்த அடுப்பு ஒன்றே வீட்டுக்கு வெளிச்சமாகவும் குழம்பு. கறி வைப்பதற்கான தீயாகவும் கணப்பாகவும் பயன்பட்டுவிடும். தனித்தனியாக எரிவாயு, கணப்பு, அடுப்பு, விளக்கு என்று வீணாக ஏன் செலவு செய்ய வேண்டும்? அந்த அடுப்பிலே வைக்கும் கறி குழம்புக்கு உங்கள் சிற்றுண்டிக்கான குழம்பு ஈடாகுமா?”

நிருபர் அதற்குப் பிறகு எத்தனையோ வினாக்களை எழுப்பிவிட்டார்.

என்ன வினா எழுப்பினாலும் நகர்ப்புறங்களைப் பற்றி மாமாவுக்கு நல்ல அபிப்பிராயமே ஏற்படவில்லை. கிராமப் புறங்கள்தான் சொர்க்கம், நகர்ப் புறங்கள் அனைத்தும் நரகம் என்று அவர் வர்ணிக்கத் தொடங்கிவிட்டார்.

நிருபர் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது, “மாமா! இந்த நரகமாகிய நகரத்தில் இருக்கவே மனம் ஒப்பாதே. எப்பொழுது சொர்க்கமாகிய உங்கள் கிராமத்துக்குப் புறப்படப் போகிறீர்கள்?” என்று கேட்டார்.

“கிராமத்துக்கா? இனிமேல் கிராமத்தைப் பற்றி எங்கே சிந்திப்பது? மிச்ச காலத்தை நகரத்திலேயே கழித்துவிடப் போகிறேன்!” என்றார் மாமா.

“இங்குதான் உங்களுக்கு மிகவும் அசௌகரியமாகவும் தொல்லை தருவதாகவும் ஆரோக்கியக் குறைவானதாகவும் சூழ்நிலை அமைந்திருக்கிறதே. தொல்லை, அசௌகரியத்துக்கு நடுவே எதற்காக வாழவேண்டும்?” என்று ஆச்சரியத்துடன் கேட்டார் நிருபர்.

மாமா சிரித்துக் கொண்டே சொன்னார்... “தம்பி! மனிதன் பழக்கத்துக்கு அடிமை என்ற விடயம் உனக்குத் தெரியாதா? கொஞ்சநாள் நகரத்தில் வந்து தங்கிப் பழகியதும் இங்கிருக்கும் தொல்லைகளும் வசதிக் குறைவும் மிகவும் பழகிப் போய்விட்டன. இனிமேல் இந்த மாதிரி வசதிகள் இல்லாத கிராமத்தில் பொழுது போக்க முடியாதுபோல் தோன்றுகிறது. அதனால் கிராமத்துக்குத் திரும்பிப் போகும் எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டேன்!” என்றாரே பார்க்கலாம்! நிருபருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவே இல்லை.

## வாசித்தல்


வாசித்து பழகு எழுத்தை வாசித்து பழகு
கதைகளும் கவிதைகளும் வாசித்து பழகு
கடிதங்கள் கட்டுரைகள் வாசித்து பழகு
எல்லா இலக்கியங்கள் வாசித்து பழகு

காண்பவைகள் கூட வாசித்தல் வேண்டும்
காலம் முழுக்க வாசித்தல் வேண்டும்.
வாசித்தல் என்றும் தெளிவை தரும் நம்
வாழ்க்கையில் என்றும் உயர்வை தரும்.

பையில் பல நூறு பணம் இருந்தாலும்
புத்தகம் இருந்தால் மதிப்பை தரும்
சுற்றத்தில் உனக்கு மதிப்பை தரும்
வாழ்க்கையில் உனக்கு சிறப்பை தரும்.

“தோசை ஏன் கறுப்பாக இருக்கு?”

“சமையல்காரருக்கு மூணுமாச சம்பளப்பாக்கியாம். கறுப்பு தினம் அனுஷ்டிக்கிறார்!”



“டாக்டர், என் அப்பாவுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குது.”

“கவலைப் படாதீ[illegible]

## பொது அறிவுத் தகவல்கள்

- ஆமைகள் பின்பக்க துளை வழியாக சுவாசிக்கின்றன.
- தெள்ளுப்பூச்சி தன்னைவிட 130 மடங்கு உயரம் வரை தாண்டும் திறன் கொண்டது!
- நிறைய மின்மினிப்பூச்சிகளை விழுங்கிவிட்டால், அந்தத் தவளையும் சிறிதுநேரம் மினுமினுக்கும்!
- பூனைகளுக்கு சுவை உணரும் சக்தி குறைவு. அவற்றுக்கு 473 சுவை மொட்டுகள்தான். மனிதர்களுக்கோ சராசரியாக 8 ஆயிரம்!
- காகங்களால் தங்களை மோசமாக நடத்திய மனிதர்களின் முகங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மகூட இருக்கிறவர்களை நாம் பார்த்துக் கொண்டால் நமக்கு மேலே இருப்பவன் நம்மைப் பார்த்துக் கொள்வான். – *யாரோ*


வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


## மழை தருவாய் என்றிருக்க கண்ணீர் தந்து போனாயோ

சுன்னாகம் குப்பிளான் பகுதியில் மின்னல் தாக்கி மூவர் உயிரிழந்த சம்பவம் வடபுலம் முழுவதையும் நெக்குருக வைத்துள்ளது.

கொடும் வெயில் போக்க வானம் மின்னி முழங்கி மழை நீர் தரப் போகிறது என்றிருக்க, கண்ணீர் மழை தந்துபோன கொடுமை சொல்லிமாளா.

கொட்டும் வெயிலிலும் தம் உடலை வருத்தி நம்பிக்கையோடு விவசாயம் செய்திருந்த வேளை, ஒரு கணப்பொழுதில் மின்னல் தாக்கி உயிர் பிரிந்துபோவதென்பது வேதனையிலும் வேதனை.

தோட்டத்துக்குச் சென்ற அப்பா... அம்மா... வீட்டுக்கு வருவார்கள் என்று காத்திருந்த சின்னஞ்சிறுசுகள் தம் தாயை... தந்தையை... காலன் கவர்ந்து விட்டான் என்ற செய்தியைக் கேட்பதென்றால் அந்தத் துன்பத்தை மனித மொழிகளில் கூறிவிட முடியுமா என்ன?

மின்னலின் தாக்குதலில் உயிரிழந்த மூவரினதும் பிள்ளைகள் படுகின்ற துன்பம் ஆற்ற முடியாததாயினும் அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம்; அந்தக் குடும்பங்களின் பொருளாதாரம் எனப் பலவற்றையும் இவ்விடத்தில் நாம் சிந்தித்தாக வேண்டும்.

இயற்கை ஏற்படுத்தும் அனர்த்தம் தொடர்பில் வழங்கப்படும் அரச உதவிகள் போதுமானதல்ல என்பதுடன் அவற்றைப் பெறுவதில் இருக்கக்கூடிய காலதாமதங்கள் மனத் துயரை மேலும் வலுவூட்டுவதாகவே இருக்கும்.

எனவே தனி மனித உதவிகளும் பொது அமைப்புக்களின் பங்களிப்புகளும் இங்கு அவசியமாகின்றன.

இது விடயத்தில் பரோபகார சிந்தையுடையவர்கள் தங்களால் இயன்ற உதவியை சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்குச் செய்வது பொருத்தமுடையதாகும்.

அதேநேரம் உதவிகளை ஒன்றுபடுத்தி அவற்றைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சேர்ப்பிக்கின்ற பணியில் மனிதநேய அமைப்புகள் முன்வந்தால் அது பெரும் புண்ணிய கருமமாகும்.

எதுஎவ்வாறாயினும் மின்னல் தாக்கி உயிரிழந்த மூன்று பேரினதும் குடும்பங்களுக்கு கிடைக்க வேண்டிய அரச உதவி என்பதில், அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பொருத்தமான அரச வேலைவாய்ப்பை வழங்குவது அவசியமானதாகும்.

இது பற்றி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகமும் பிரதம செயலாளர் அலுவலகமும் கருசனை கொள்வதானது அந்தக் குடும்பங்களின் சீவனோபாயத்துக்கு உத்தரவாதமளிப்பதாகவும் இருக்கும். எனவே இதுவிடயத்திலும் பொருத்தமான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கக்கூடிய உதவிகளை காலதாமதமின்றியும் அலைக்கழிவின்றியும் வழங்குவது உத்தமமாகும்.

தவிர, மின்னல் தாக்கி உயிரிழந்த மூவரின் குடும்பங்களுக்கு உடனடி உதவிகளை வழங்க விரைந்த மனிதநேயமுடையவர்கள் போற்றுதற்குரியவர்கள்.

# ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பின் பாரிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம்

### பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சியில் பாரிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் அரசாங்கத்தின் பங்காளராகவே உள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வரையில் இந்த தேசிய அரசாங்கமே நிலவும். தேர்தல் காலம் வரையில் தேசிய அரசாங்கம் குறித்து எவ்வித பிரச்சினையும் அரசாங்க மட்டத்தில் ஏற்படப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலங்களில் தேசிய அரசாங்கத்துக்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயற்சித்திருப்பினும் அதனை சமர்ப்பிக்கவில்லை.

எஞ்சியிருக்கும் குறுகிய காலத்திலும் அதற்கான அவசியம் ஏற்படாது என எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும் தேர்தலின் பின்னர் ஆட்சியில் பாரிய மாற்றத்தை எதிர்பார்க்க கூடியதாக இருக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போதைய அமைச்சரவையின் தலைவராக அங்கம் வகிக்கும் அதே சந்தர்ப்பத்தில் நாட்டின் முக்கிய அமைச்சுக்களான பாதுகாப்பு அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுக்களுக்கு பொறுப்பானவராகவும் இருக்கிறார்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் பங்காளராக காணப்படும் நிலையில் தற்போதும் தேசிய அரசாங்கமே நிலவுகின்றது. இதற்கு மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது.

தேசிய அரசாங்கம் என்பது பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும் தற்போதும் ஒரு தேசிய அரசாங்கமே நிலவுகின்றது.

ஆளும் தரப்பில் இரு பிரதான கட்சிகளும் அங்கம் வகிக்குமாயின் அதனை தேசிய அரசாங்கமாகவே கருத வேண்டும். அதன் அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் அரசாங்கத்தின் பங்காளராகவே உள்ளார். எனவே தற்போது தேசிய அரசாங்கமே காணப்படுகின்றது. இதனை எவராலும் மறுக்க முடியாது. (ம-3)

# இராணுவத்தின் தொழில்நுட்ப உதவியுடன் க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சை முறைகேடுகளைத் தடுக்க பொறிமுறை

### பரீட்சைகள் திணைக்களம் புதிய நடவடிக்கை

(கொழும்பு)

க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளின்போது மாணவர்கள் இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் புதிய பொறிமுறை (Geofencing system) நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பொறிமுறை சிறப்பு அதிரடிப் படை (STF) மற்றும் இராணுவத்தினரின் தொழிலநுட்ப உதவியுடன் இந்த ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் அதிதிறன் அலைபேசி (Smart Phone), கணிப்பான் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி விடையளிக்கும் பரீட்சை முறைகேடு தடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பரீட்சை மண்டபத்தில் இந்தப் பொறிமுறையை (Geofencing system) பொருத்திவிட்டால் மாணவர் ஒருவர் இலத்திரனியல் சாதனத்தைப் பயன்படுத்தும் போது இலகுவாகக் கண்டறிய முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (ம-3)

## ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் ரணிலே வருவார்

### அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனவும எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் வேட்பாளராக கேட்பார் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஊடகங்களில் கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதாகவும் இதனஉண்மைநிலைஎன்னவெனவும் அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

ஏனைய கட்சிகளில்ஜனாதிபதி வேட்பாளர்களை தெரிவு செய்வது குடும்ப உறுப்பினர்களே ஆகும். மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் கூடி தீர்மானம் எடுககின்றனர். ராஜபக்ஷக்களிடையேயும், பண்டாரநாயக்க பரம்பரையிலும்இவ்வாறுதான்இடம பெற்றது என்றார். (ம-3)

## மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது எனப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (7)

## வாக்காளர் மீளாய்வு நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் இடாப்பு மீளாய்வு தொடர்பில் முதற்கட்ட நடவடிக்கைகள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களைத் தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக, ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில், மாவட்டப் பிரதிநிதிகள் அல்லது உதவி தேர்தல்கள் ஆணையாளரினால் கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் வீடுகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதுடன், பூரணப்படுத்தப்படும் வாக்காளர் இடாப்பு எதிர்வரும் ஜுன் 6ஆம் திகதிக்குப் பின்னர் சேகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கவீனமடைந்துள்ள வாக்காளர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## சத்திய தரிசனம்

### வாழ்க்கை ஒரு நீரோட்டம்



❖ தூய்மையற்ற சிந்தனைகளைப் படித்தால், அசுத்தமான எண்ணம் மனக்கண்ணாடி வழியே இதயத்திரையில் படியும். நல்ல திசையில் மனதைத்திருப்பி நல்லதைச் செய்ய வேண்டும்.

❖ கல்லை, மண்ணை, காகிதத் துண்டைக் கடவுள் நிலைக்கு உயர்த்தலாம். ஆனால் கடவுளைக் கல்லாகவும், காகிதத்துண்டாகவும் கீழ் நிலைக்கு இறக்கி விடக்கூடாது.

❖ இளமை போனால் திரும்பாது. அதுபோல, வாழ்க்கையும் ஒரே திசையில் செல்லும் நீரோட்டம் என்பதால், பயனுள்ள வகையில் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

❖ வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு செயலையும் கடவுள் கொடுத்த பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள். இன்பம், துன்பம் எதுவந்தாலும் அது இறைவன் கொடுத்ததாகும்.

❖ எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. பேச்சும் செயலும் ஒன்றாக இல்லாவிட்டால், மனிதனின் மனதில் அமைதி தொலைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் சமூக ஒற்றுமையை முன்நிறுத்திய சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா

சித்திரை புதுவருடப்பிறப்பை முன்னிட்டு பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கலை, கலாசார கொண்டாட்டங்கள் மற்றும் விளையாட்டுப் பெருவிழா கழகத்தின் தலைவர் வி.சிவச்செல்வன் தலைமையில் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

சமூக ஒற்றுமையை முன்நிறுத்தி நடைபெற்ற கலை கலாசார விளையாட்டு பெரு விழாவில் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான நிகழ்ச்சிகளுடன், முட்டி உடைத்தல், கரப்பந்தாட்டம், தலையணைச் சண்டை, பணிஸ் உண்ணுதல், கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை, சாக்கோட்டம் போன்ற பல்வேறுபட்ட கலை மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் சிறப்பம்சமாக 2019 ஆம் ஆண்டிற்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் இடம்பெற்றிருந்தது.

போட்டியில் மருதநிலா அணியை வீழ்த்தி, 786 அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீ கரித்துக் கொணடது. மேலும் இந்நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் வெற்றிக் கிணணங்களும் காசோலைகளும் வழங்கி மகிழ் விக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், நகரசபை உறுப்பினர்களான த.பரதலிங்கம், பா.பிரசன்னா, வவுனியா உதைபந்தாட்ட சங்கச் செயலாளர் க.நாகராஜன், மருத்துவர் சூர்யகுமார், செ.மதுரகன மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-250)








## பும்ரா சிறந்தவர் – மலிங்க

உலகிலேயே நம்பர் வன் பந்து வீச்சாளராக பும்ரா திகழ்கிறார் என்று இலங்கை அணியின் மூத்த கிரிக்கெட் வீரர் லசித் மலிங்க பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரில் சென்ற ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராக இருந்த லசித் மலிங்க, இந்தாண்டு மீண்டும் ஏலத்தில் எடுக்கப்பட்டு அந்த அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் அந்த அணியின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளரான பும்ரா மும்பை அணியில் மட்டும் அல்லாமல், உலகிலேயே நம்பர் வன் பந்து வீச்சாளராக திகழ்வதாக பாராட்டி உள்ளார்.

தொடர்ந்து சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் ஜஸ்பிரீத் பும்ரா, உலகக்கிண்ணத்துக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(க)

# மரண அறிவித்தல்

## திருமதி
## அருணகிரிநாதன் மகேஸ்வரி



பிறப்பு:
27.03.1953

இறப்பு:
17.04.2019

சாளம்பை புலோலி மேற்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணகிரிநாதன் மகேஸ்வரி அவர்கள் நேற்று (17.04.2019) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசேகரம் - கனகம்மா ஆகியோரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான சபாபதி - சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சபாபதி அருணகிரிநாதனின் அன்பு மனைவியும் சோமசேகரம் இளங்கோவின் பாசமிகு சகோதரியும் ஜெயபரன் (அமரர்), ஜெயநிமலன் (ஆசிரியர் - யா/வல்வை மகளிர் ம.வி), ஜெயசிறீதரன் (பிரான்ஸ்), ஜெயப்பிரகாஸ் (பிரான்ஸ்), ஜெயரூபன் (விற்பனை மேற்பார்வையாளர் L.I.C பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமதி, காயத்திரி, தர்மபாலினி, சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் தரணிகா, துவாரகன், திவ்வியன், ஹஜானி, ஹருண், ஹரிசான், ஹரீஷ், ஹருணி, ஜனாத், டிலானி, சஸ்விதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2019) வெள்ளிக்கிழமை மு.ப 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6157)

சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்:- குடும்பத்தினர்
077 723 8594, 077 651 0232

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்

# ஊடகக்கற்கைகள் துறை தனித்துறையாக தரமுயர்த்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் பட்டப்பபடிப்பு அலகாக இயங்கி வந்த ஊடகக் கற்கைகள், தனித் துறையாக உயர்கல்வி அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

ஊடகக் கற்கைகள் துறையானது, ஆங்கில மொழி கற்பித்தல் துறையுடன் இணைந்து தரமுயர்த்தப்பட்டிருக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலானது, கடந்த மாதம் 27 ஆம் திகதி நகரத் திட்டமிடல், நீர் விநியோகம் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் கீழ் 17ஆவது புதிய துறையாக ஆங்கில மொழி கற்பித்தல் துறையும், 18ஆவது துறையாக ஊடகக் கற்கைகள் துறையும் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஊடகக் கற்கைகள் துறையின் இணைப்பாளராக கலாநிதி. சி.ரகுராமும் அவருடன் இணைந்து மூன்று நிரந்தர விரிவுரையாளர்களும் தற்போது அங்கு பணியாற்றி வருகின்றனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழியில் ஊடகக் கற்கைகளை இத்துறையே வழங்கி வருவதும், ஊடகக் கற்கைகளில் பட்டப்படிப்பு மாத்திரமல்லாது ஊடகத்துறையில் முதுதத்துவமாணி, கலாநிதிப் பட்ட ஆய்வுகளுக்கும் யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வழியாக தற்போது வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-9)

### தியாகி அறக்கொடை நிறுவனத்தினால்

# மின்னல் தாக்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழில் மின்னல் தாக்கி பலியானவர்களின் இறுதிச் சடங்கில் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் (ரி.சி.ரி) தலைவர் வாமதேவ தியாகேந்திரன் கலந்து கொண்டார்.

தாயை இழந்த பிள்ளைக்கு 30 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அனைத்து பிள்ளைகளின் படிப்புச் செலவையும் தியாகி அறக்கொடை நிறுவனம் ஏற்பதாகவும் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தில் ஒரு குடும்பத்திற்கு இன்னும் வீட்டுத்திட்டம் கிடைக்காததால் இன்னும் இரண்டு மாதத்தில் அத்திட்டம் அரசால் வழங்காவிடின் அதனையும் தியாகி அறக்கொடை நிறுவனம் பொறுப்பேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

# வட பகுதியில் வரட்சியால் 99 ஆயிரம் பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாகணத்தில் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக 28 ஆயிரத்து 950 குடும்பங்களை சேர்ந்த 99 ஆயிரத்து 191 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேசத்தினை சேர்ந்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய்ம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 53 ஆயிரத்து 569 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ் மாவட்டத்தில் 33 ஆயிரத்து 501 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 296 பேரும், கிளிநொச்சியில் 5 ஆயிரத்து 720 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

# 13வது திருத்தத்தை ஐ.தே.க தொடர்ந்து மீறுகின்றது

### டளஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாண சபை முறைமையினை இல்லாதொழிக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படுவதாக குற்றஞ்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை மீறுவதாகவும் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை பற்றி கருத்துரைக்கும் அரசாங்கத்திற்கு தேர்தல் உரிமை மீறப்படுவது தொடர்பில் எவ்வித அக்கறையும் கிடையாது. இவ்வருடத்தில் மாகாண சபை தேர்தல் இடம்பெறுமா என்பது சந்தேகத்திற்கிடமானது. இம்மாதத்துடன் மேல்மாகாண சபையின் பதவிக் காலமும் முடிவடைந்து 08 மாகாணங்கள் ஆளுநரது நிர்வாகத்தின் கீழ் முழுமையாக உள்ளடங்கப்படும்.

மாகாண சபை முறைமையினை உருவாக்கிய ஐக்கிய தேசியக் கட்சியே இன்று மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்தும் நோக்கில் எல்லை நிர்ணய மீளாய்வுக் குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நியமிக்கப்பட்டது.

மாகாண சபை தேர்தலை விரைவுபடுத்தும் எவ்வித நடவ்டிக்கைகளும் எல்லை நிர்ணய மீளாய்வு குழுவினரால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மாறாக காலதாமதப்படுத்தும் செயற்பாடுகளே இடம்பெறுகின்றன.

பிரதமரின் தலைமைத்துவத்தில் இக்குழு செயற்படுவதால் அறிக்கை விரைவாக கிடைக்கப் பெறும் என்று குறிப்பிட முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் பலவீனம் தேர்தலுக்கு செல்வதே. இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தல் பிற்போடப்படுகின்றது.

அரசாங்கம் மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கு பல காரணிகளை குறிப்பிடலாம். ஆனால் இவ்வருடம் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வேண்டும். ஜனாதிபதி தேர்தல் பிற்போடுவதற்கு எவ்வித காரணிகளும் அரசாங்கத்தின் வசம் கிடையாது. இடம்பெறவுள்ள அனைத்து தேர்தல்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாரிய பின்னடைவினை ஏற்படுத்தும் என்றார். (ம-3)


# பெறுகை அறிவித்தல் தனியார் பாதுகாப்பு சேவை பருத்தித்துறை நகரசபை

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2019.04.22 தொடக்கம் 2019.05.09
பிற்பகல் 03.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2019.05.10
பிற்பகல் 2.30 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி :- 2019.05.10
பிற்பகல் 3.00 மணி

01) பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02) கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்படும் மீளளிக்கமுடியாத படிவக்கட்டணம் ரூபாய் 2000.00 உம், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபாய் 5000.00 உம் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

03) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் (பதிவுத் தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்). அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.

04) கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கமுடியும்.

05) இக் கேள்வி அறிவித்தல் தொடர்பாக பருத்தித்துறை நகர சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

06) மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை | |
|---|---|---|---|---|
| | | பகல் | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | பருத்தித்துறை நவீன சந்தைக் கடைத் தொகுதியும் மரக்கறிச் சந்தையும் | 01 | 5,000.00 | 60 நாட்கள் |
| 02 | தும்பளை கிழக்கு கடற்கரை சிறுவர் பூங்கா | 01 | | |
| | மொத்தம் | 02 | | |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கனமழை காரணமாக

# மத்தளவுக்கு அனுப்பப்பட்ட ஐந்து விமானங்கள்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அண்மித்த பகுதியில், நேற்று பெய்த கன மழை காரணமாக விமானங்கள் மத்தள விமானநிலையத்தில் தரையிறங்கின.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தரையிறங்க வேண்டிய ஐந்து விமானங்கள், மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது. நேற்று மாலை 4 மணிமுதல் அப்பகுதியில் கடுங்காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

மலேசியா, இந்தோனேஷியா, சிங்கபூர், டோகா- கட்டார் ஆகிய விமான நிலையங்களிலிருந்து வருகைதந்த விமானங்களே இவ்வாறு மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என்ற செய்தியில் உண்மையில்லை

### அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கண்டி)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் பாராளுமன்ற குழுவின் இணக்கத்துடன் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. 113 உறுப்பினர்களின் ஆதரவின்றி அரசாங்கம் ஒன்றை அமைத்தால், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட நிலைமையே ஏற்படும்.

புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என்ற செய்தியில் எந்த உண்மையுமில்லை. அது பச்சைப் பொய். சில ஊடகங்கள் உருவாக்கிய செய்தி இது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கண்ணிவெடி...

இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முகமாலைப் பகுதியில் த ஹலோ ரட்ஸ் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இரு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை முதல் முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும்பணியில்ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே, திடீரென கண்ணிவெடி வெடித்துள்ளது. வெடித்த சத்தம் கேட்ட போது ஏனைய பணியாளர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று அங்கு படுகாயமடைந்த நிலையில் இருந்த இருவரையும் சக பணியாளர்கள் காப்பாற்றியதுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-101)

## போதைப்பொருள்...

படையினரால் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்த 5 மோட்டார் சைக்கிள்களும், 3 இலட்சம் ரூபாயுக்கும் அதிகமான பணத் தொகையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்த நபர்களிடம் இருந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மின்னல் தாக்...

சமயமே இருவரும் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் முதுகு மற்றும் கைப் பகுதிகளில் எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

இச் சம்பவத்தில் தட்டாங்குளம் வீதி மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 60வயதான அ.சிவசுப்ரமணியம், அவரது உறவினரான 60வயதான அ.சுப்பிரமணியம் ஆகிய இருவருமே மின்னல் தாக்கத்தால் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தென்மராட்சிப் பகுதியில்நேற்று புதன்கிழமை மாலை வேளையில் இடியுடன் மழைப் பொழிவு காணப்பட்டது. உடுவில்-குப்பிளான்பகுதியில்நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மின்னல் தாக்கத்தால் மூவர்பரிதாபமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-30.114)

## நாடுபூராகவும்...

விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதுடன் அவற்றில் 42 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இதனை தெரிவித்த அவர், புத்தாண்டு காலப்பகுதி சம்பவங்கள் குறித்து தகவல்கள் தருகையில் மேலும் கூறியதாவது,

புத்தாண்டு காலமான 13 ஆம் திகதி தொடக்கம் நேற்று 6.00 மணி வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 31 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன் 42 பேர் வரையில் விபத்துக்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

அதிகளவில் விபத்துக்கள் பதிவாகும் மாதமாக கருதப்படும் இம்மாதத்தில் வீதிவிபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக விசேட சோதனை நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடத்தின் பண்டிகைக் காலத்தில் விபத்துக்களின் அளவு குறைந்த மட்டத்தில் பதிவாகியுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த 11 ஆம் திகதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வரும்மது போதையில்வாகனம்செலுத்து வோரை கைது செய்யும் விசேட நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை தொடரவுள்ளது.

அத்துடன் கடந்த 11 ஆம் திகதியிலிருந்து இதுவரையான காலப் பகுதியில் மாத்திரம் சுமார் ஆயிரத்து 536 பேர் வரையில் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளது டன் 42 ஆயிரத்து 114 போக்குவரத்து வழக்குகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் முற்பகல் 6.00 மணி தொடக்கம் நேற்று முற்பகல் 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்திற்குள் மாத்திரம் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 266 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 7 ஆயிரத்து 134 போக்குவரத்து வழக்குகள் பதிவாகியுள்ளது. மேலும் பண்டிகை காலங்களில் அதிகளவிலான விபத்துக்கள் மதுபோதையில் வாகனம் செலுத்துகின்றமையின் காரணமாக இடம் பெற்றுள்ளது.

அதனை கருத்தில் கொண்டு வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இத்தகைய விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறான வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தல் தொடர்பில் சாரதிகளின் ஒத்துழைப்பும் அவசியமாக காணப்படுகின்றது.

போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் வீதி யோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தை நிறுத்திவைத்துள்ள சாரதிகளுக்கு எதிராக போக்குவரத்து சட்டத்திற்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-3)

## மக்கள் வசிக்கும் இடங்களில்...

வடக்கில் முழுமையான படை விலக்கல் சாத்தியமில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன ஊடகம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தேசிய பாதுகாப்பு, எல்லைக் கட்டுப்பாட்டுக் காரணங்களால், முப்படைகள் மற்றும் பொலிஸாரைத் தமது இடங்களில் இருந்து ஏனைய இடங்களுக்குச் செல்லுமாறு கேட்க முடியாது என அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக தமிழ் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் மக்கள் அவர்களின் சொந்த நிலத்தில் வாழ வேண்டும். படையினரின் வசதிக்காக அவர்களை வெளியிடங்களுக்கு மாற்றவே முடியாது என்றும் இதற்கு ஒருபோதும் மக்கள் இடமளிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் நிலங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் மக்கள் துயரங்களை அனுபவித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கில் மக்களின் பல காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் உள்ளதோடு, முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது நிலங்களை விடுவிக்கக் கோரி கேப்பாப்புலவு மக்கள் நீண்டகாலமாக ஜனநாயக வழியில் போராடி வருகின்றனரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வடக்கு - கிழக்கில் சில பகுதிகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளதாக தெரிவித்த இரா.சம்பந்தன்.

எனவே, மக்களின் நிலங்களிலிருந்து இராணுவம் உடன் வெளியேற வேண்டும் என்றும் மக்கள் வசிக்கும் இடங்களில் இராணுவ முகாம்கள் தேவை இல்லையென்றும் தெரிவித்துள்ளார். (ம-3)

## சகோதரர்கள் இரு...

தெமடகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தெமட்டகொடையை சேர்ந்த 11 மற்றும் 16 வயதுடைய சகோதரர்கள் இருவர் விடுமுறைக்காக பொத்துவில் சென்று கொட்டுகல ஆற்று பகுதியில் படகொன்றில் சவாரி செய்துள்ளனர்.

இந் நிலையில், அங்கு வந்த யானையை கண்டு அச்சம் கொண்ட அவர்கள் நீரில் குதித்துள்ளனர். எனினும் நீச்சல் தெரியாததனால்அவர்கள் இருவரும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், சடலங்களை மருத்துவ மனையில் ஒப்படைத்துள்ளனர். (ம-3)

# பொது ஜன பெரமுன போலியான கருத்துக்களை தெரிவித்து வருகின்றது

## ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

போலியான கருத்துக்களை பொதுஜன பெரமுன தெரிவித்து வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து, மகிந்த ராஜபக்ஷ மற்றும் பஷில் ராஜபக்ஷ ஆகியோர் போலியான கருத்துக்களை தெரிவிப்பதாக மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

முல்கம பிரதேசத்தில் ரயில்வே திணைக்கள கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வருடம் 150 இலட்சம் மக்கள் வாக்களிப்பார்கள். அதில் சுமார் 140 இலட்சம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளாகப் பதிவாகும். வெற்றி பெறுபவர் யாராக இருந்தாலும் 65 - 70 இலட்சம் வாக்குகளைப் பெறவேண்டியது அவசியமாகும். அதற்கேற்ற செயற்திட்டங்களை முறையாக முன்னெடுத்தால் எம்மால் இந்த தேர்தலில் நிச்சயம் வெற்றிபெற முடியும்.

2015 ஆம் ஆண்டு நாம் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம். அந்த சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்ய முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கூட நம்பிக்கை கொள்ளவில்லை. எனினும் 4 இலட்சம் கூடுதலான வாக்குகள் பெற்று நாம் தேர்தலில் வெற்றி பெற்றோம்.

இதேபோன்ற போலியான கருத்துகளையே தற்போதும் பொது ஜன பெரமுனவினர் முன்னெடுத்து வருகின்றனர் என்றார். (ம-3)

## ஆடு மேய்க்க சென்றவர்...



பிரகாசம் தயானந்தன் என்பவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டு ஆடுகளுக்கு குழைகள் வெட்டி எடுத்துவந்த வேளை மயக்கமடைந்து நிலத்தில் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மாலை 5.00 மணிக்கே இவர் உயிரிழந்திருந்தமை அயலவர்களால் கண்டறியப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இவரது உயிரிழப்பு தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின் குமார் முன்னிலையில் சடலம் இனங்காணப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-286)

## அரசை கவிழ்ப்பதற்கு எப்போதும்...

பக்ஷ குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெல்லன்வில ரஜமகா விஹாரைக்கு சென்றிருந்த போதே இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். அவருடன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் பெல்லன்வில ரஜமகா விஹாரைக்கு சென்றிருந்தார்.

சித்திரைப் புத்தாண்டு பாரம்பரிய முறைப்படி தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வு பெல்லன்வில விஹாரையில் நடைபெற்றது. (ம-3)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-6059)
0768226240
V2 TRAVELS
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

இறுதிச் சந்தர்ப்பம்! ஏப்ரல் 20 வரை மட்டுமே!!
மலேசிய வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| ஃபோக் லிஃப்ட் டிரைவர் (Forklift Driver) | 1130+OT635RM 75,895/- |
| இன்டஸ்ட்ரியல் எலெக்ட்ரீஷியன் Industrial Electrician | 1130+OT635RM 75,895/- |
| இயந்திர தொழில்நுட்பவியலாளர் Mechanical/Instrumental Technician | நேரில் பேசி தீர்மானிக்கலாம் |
| தொழிற்சாலை பணியாளர்கள் General Workers | 75,895/- |

(C-6147)
3 வருட கம்பனி விசா
விசா, டிக்கட் கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்!
தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும்
8 மணி + OT (மாதம் 78 மணி) / வாரம் 6 நாள் வேலை. வயதெல்லை : 18-40
எமரல்ட் ஐல் License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம். The Loversக்கு அருகே
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
077 00 38 215, 077 55 46 956, 021 221 9 221

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(8487)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்



### நாகச்சந்திரன் சிவச்சந்திரன்

(ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகச்சந்திரன் சிவச்சந்திரன் நேற்று *(17.04.2019)* காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை வங்கி முன் ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு.

தகவல் : குடும்பத்தினர் 021 224 1137

(3502)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org